श्री धन्वन्तरये नमः ।

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

சார்வரி
மார்கழி - தை

JANUARY
1961



காகுதி 23
பகுதி 1

Vol. 23
No. 1

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. கெ. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.

உப ஆசிரியர் & பிரசாரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

| | |
|---|---|
| புதிய ஆண்டு | 5 |
| தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் நிர்வாஹ ஸமிதிக்கூட்டம் | 8 |
| செய்திகள் | 10 |
| பட்டினியால் உடல் நிறைக்குறைவு | 11 |
| திரிதோஷ வர்க்க அமைப்பு | 14 |
| தோஷங்களின் மலநிலே | 19 |
| ஆயுர்வேத யோக புஸ்தகம் | 21 |

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 12, …

வைத்யரத்னம் P. S. வாரியருடைய.

# ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

ஸ்தாபிதம்: 1902. ✲ போன் நெ. 44 (திரூர்)

பிராஞ்சுகள்:

| | |
|---|---|
| கல்லாய் ரோடு, கோழிக்கோடு (போன் நெ. 2155); | ஈரோடு (முனிசிபல் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்); (போன் நெ. 172) |
| வடக்கம்தரா, பாலக்காடு (போன் நெ. 104); விற்பனை டிப்போ G. B. ரோட்டில் | மகாத்மாகாந்தி ரோடு, எர்ணுகுளம் (போன் நெ. 674) |
| திரூர் (போன் நெ. 31) | ஸ்டாட்ச்யூ ரோடு, திருவனந்தபுரம் (போன் நெ. 3924) |

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக் கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில் நடத்தப்பெறும்.

மானேஜிங் டிரஸ்டி.

# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

✻

# ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

✻

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

## கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy
## (Coimbatore) Limited.
## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments.

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752),
Cannanore (Phone 92),
Palghat (Phone 195),
Kozhikode (Phone 984),
Ernakulam (Phone 494),
Ponani (Phone 41),
Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

*ரஸசாலா:*
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

*ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:*
31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

S. V. **ராதாகிருஷ்ண சாஸ்திரீ,** *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி.

**கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வநாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது.

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா
பிரதான வைத்யர்.



# வைத்ய சந்த்ரிகை.

**தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.**

| | | |
|---|---|---|
| தொகுதி 23<br>Vol. 23 | சார்வரி – மார்கழி – தை<br>JANUARY 1961 | பகுதி 1<br>No. 1 |


**आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।**
**द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥**

# புதிய ஆண்டு

வைத்ய சந்திரிகையின் இருபத்துமூன்ருவது ஆண்டின் முதல் இதழை இன்று வெளியிடுவதில் அதிகப் பூரிப்பு அடைகின்ருேம். தமிழில் வெளியாகும் நாட்டுவைத்யப் பத்திரிகைகளில் இருபத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்துள்ள பெருமை இதற்கே உள்ளது. தமிழ்நாடு வைத்யர்களிடையே இப்பத்திரிகை பெருமளவில் நன்மதிப்பு பெற்றுவந்துள்ளது. பொருளாதாரம் முதலியவைகளில் ஆரம்ப காலத்திலிருந்த சிரமங்கள் நீங்கி இன்று அமைப்பிலும் பொருளடக்கத்திலும் சிறந்து விளங்கும் பெருமை—இதை எல்லா வகையிலும் ஆதரிக்கும் தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டல அங்கத்தினர்களேயே சாரும்.

மேலும் வளர்ச்சி பெற, இதன் பக்கங்களை அதிகப்படுத்துவதிலும் பலதரப்பட்ட விஷயத்தொகுப்புகளிலும் ஈடுபட விருக்கிருேம். அங்கத்தினர்கள் பல வகைகளில் இப்பணியில் ஒத்துழைப்பதை எதிர்பார்க்கிருேம். ஆயுர்வேதத்தில் பல்வேறு மூல நூல்களும்

அதற்கான விரிவு நூல்களும் இருந்தபோதிலும் ஆயுர்வேத வளர்ச்சிக்கு விஷயவாரியாகத் தொகுத்து, அவைகளை அனுபவத்திற்குக் கொணரச் சுலபமான விளக்கவுரைகள் அடங்கிய கட்டுரைகள் மிக அவசியமாயிருக்கின்றன. ஆங்காங்குள்ள வைத்யப் பிரமுகர்கள் தம் தம் அனுபவக் குறிப்புகளையும், அதில் தாம் கண்ட தோஷ தூஷ்ய ஸம்மூர்ச்சனை, அதைப் பிரிப்பது என்ற சிகித்ஸா ஸூத்திரத்தின் விளக்கங்களையும் தொகுத்து அனுப்புவது பெரிதும் உதவும்.

ஒவ்வொரு வைத்யனும் தனித்தனியே தன் தேவைக்கான மருந்துகளைத் தயாரிப்பது என்பது இன்றைய நாகரிகத்திற்கும் சூழ்நிலைக்கும் ஒவ்வாததுகண்டு மருந்து உற்பத்தி சாலைகள் பெருகுகின்றன. ஆனால் இவைகள் தமக்கு ஆதர்சமாகக் கொண்டுள்ள யோக—கல்ப வழிகள் பலதரப்பட்டவை. இந்த யோகங்களையும் கல்பங்களையும் பரிசீலித்து தற்காலத்திய அனுபவத்திற்கேற்றவாறு அவரவர்கள் பரிஷ்காரம் செய்துகொண்டு வருவதை வைத்யர்களுக்கும் ஏனைய மருந்து உற்பத்தியாளர்களுக்கும் பத்திரிகை வாயிலாக வெளியிடுவது இதுபற்றிய ஆராய்ச்சிக்கு வழிகோலும். வைத்யன் தன் தனது உபயோகத்திற்கெனத் தயாரிக்கும் கையாளத் தகுந்த முறைகள் அனைத்தும் பெருமளவில் பலர் உபயோகத்திற்கெனத் தயாரிக்க முற்படும் ஔஷத உற்பத்தி சாலைகளில் கையாள முடியாமற் போகும். இவைகளை யுக்தியால் மாற்றியமைக்கும் போது அவ்விஷயமாக நன்கு ஆராய்வதும் இவ்விஷயத்தில் பலரின் கருத்துக்களை அறிவதும் மிகவும் உதவும். இவ்வகை ஆராய்ச்சியிலும் வைத்ய சந்திரிகையை நன்கு பயன்படுத்திக்கொள்ளக் கோருகிறோம்.

பத்திரிகை நிர்வாஹ ஸமிதியினர், பத்திரிகையின் ஏப்ரல் இதழிலிருந்து வெளியிட, கீழ்க்கண்ட முக்ய விஷயங்களை எடுத்துக்கொண்டுள்ளனர்.

**1. மர்ம விக்ஞானம்:** உடற்கூறு அமைப்பில் மர்மங்கள்—வர்மங்கள் எனக் கூறப்படும் சில பகுதிகளில் காயமோ அடியோ வேறு நோயோ ஏற்படுகையில் கடும் உபத்திரவங்கள் மரணம் வரை ஏற்படுகின்றன. இத்தகைய ஸ்தான அமைப்புகளைப்பற்றி ஆயுர்வேதம் கண்டுள்ள உண்மைகளை விளக்கும் வகையிலே இக்கட்டுரைகள் வெளியாகும். இந்த ஸ்தானங்களின் சித்திரங்களையும் கூடியவரை சேர்த்து வெளியிட ஏற்பாடாகின்றது.

**2. ரோக லக்ஷண கோசம்;** வியாதியின் குறிகளைப் பற்றிக் கூறும் சொற்களை வரிசையாகத் தொகுத்து, அவைகளால் குறிப்

பிடப்படும் சரீரத்தின் விகிருதி நிலை—இவைகளின் பிரகிருதி நிலை இவைகளைப்பற்றி விளக்கும் பகுதி.

இவ்விரண்டு பகுதிகளும் இவ்வாண்டின் விசேஷப் பகுதிகளாக விளங்கும். சென்ற ஆண்டில் வெளியிட்ட சாரீர சப்தகோசம் வைத்தியர்களிடையே நல்ல மதிப்பைப் பெற்றுள்ளது. இதைப் புத்தக உருவில் தனியே வெளியிடவும், யோகரத்னாகரம் தமிழ் மொழி பெயர்ப்பில் இதுகாறும் வெளிவந்துள்ள பகுதியை தனித்துப் புத்தக உருவில் வெளியிடவும் ஏற்பாடாகி வருகின்றது.

**ஆயுர்வேத ஸாரம்**—முதல் பாகத்திற்கு வைத்யர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும் வெளியிடவேண்டிய இரு பாகங்கள் அச்சேற விருக்கின்றன. அவைகளுக்கும் நல்ல வரவேற்பிருக்கும் என நம்புகிறோம்.

இந்தத் திட்டங்கள் நிறைவேற பத்திரிகைக்கு மேலும் சந்தாதாரர்களைப் பெருமளவில் சேர்த்தும் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்தும் உதவுமாறு வைத்ய சகோதரர்களைக் கோருகிறோம்.

## மஹாமண்டல அங்கத்தினர்களுக்கு

*தங்களது சந்தா சென்ற டிஸம்பர் மாதத்துடன் முடிந்து விட்டது. மஹாமண்டலத்தின் வருஷம் 1961 ஜனவரி முதல் ஆரம்பமாகிறது. இவ்வாண்டின் சந்தா வரும் மார்ச்சு மாதக் கடைசிக்குள் செலுத்தப்படவேண்டும். இவ்விதம் செலுத்தாதவர்களிடமிருந்து ஏப்ரல் மாதப்பத்திரிகையை வி. பி. மூலம் அனுப்பிச் சந்தா பெறப்படும். இவ்விதம் மார்ச்சு மாதத்திற்குள் நேரிடையாகவோ, ஏப்ரல் மாத வைத்தியசந்திரிகையை வி. பி. மூலம் பெற்றோ சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டும் தான் அங்கத்தினர்களுக்கான சலுகைகள் உண்டு.*

*மற்றொரு விஷயம். இவ்வாண்டில் வெளியிடப்பட விருக்கும் நூல்களை விசேஷச் சலுகை விலைகளில் பெறுவதற்கு மகாமண்டல அங்கத்தினராவது மிகவும் அவசியமாகும். மஹாமண்டல அங்கத்தினரல்லாதாருக்கு இந்த விலைச்சலுகை கிடைக்காது. அதனல் எல்லோரும் மார்ச்சு மாதத்திற்குள் தமது சந்தாவைச் செலுத்தி, அங்கத்தினர் பதவியைப் புதுப்பித்துக் கொள்ளக் கோருகிறோம்.*

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

## நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் நிர்வாஹ ஸமிதியும் பத்திரிகா நிர்வாஹ ஸமிதியும் சென்ற 21—12—1960 ஞாயிறு மாலை 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் புதுக்கோட்டை வைத்ய விசாரத ஸ்ரீ P. விச்வநாத சர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

ஸ்ரீ P. விச்வநாத சர்மா, புதுக்கோட்டை.
ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரீ, திருச்சி.
ஸ்ரீ A. ராகவராவ், திருச்சி.
ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.
ஸ்ரீ K. வைத்யநாத சாஸ்திரீ, புதுக்கோட்டை.
ஸ்ரீ M. ராஜா பிள்ளை, சேலம்.
ஸ்ரீ R. K. பழனியப்பா, சேலம்.
ஸ்ரீ T. S. ஈச்வரய்யர், திருச்சி.

ஸமிதிகளின் அங்கத்தினர்களான ஸ்ரீமான்கள் N. ராம வாரியர் (மதுரை) தலைவர். V S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரீ, சென்னை, D. ஸ்ரீனிவாஸன், ராமேச்வரம், C. K. குமாரஸாமி பிள்ளை, கோயமுத்தூர்— இவர்களிடமிருந்து வந்த கடிதங்கள் படிக்கப்பட்டன.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மண்டலத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள **ஆயுர்வேத ஸாரம்** என்ற நூலின் முதல் பாகத்தை வரவேற்று அதைத் தொகுத்து வெளியிட்ட ஆசிரியர்கள் ஸ்ரீ S.M. ஸுந்தரராஜாசார்யர், ஸ்ரீரங்கம், ஸ்ரீ S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி— இவ்விருவருக்கும் ஸமிதியின் சார்பில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. ஸபையில் கலந்து கொண்டிருந்த ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிக்குத் தலைவர் மலர்மாலை சூட்டிக் கௌரவித்தார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. வைத்ய சந்திரிகையின் பக்கங்களை அதிகமாக்குவதற்கும் வைத்யர்களிடமிருந்து பலதரப்பட்ட வைத்யக் கட்டுரை

களைப் பெற்று பிரசுரம் செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடு களைச் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

2. ஆயுர்வேத ஸாரம் முதற் பாகத்தைத் தொகுத்து வெளியிட்ட அதன் ஆசிரியர்கள் பண்டித ஸ்ரீ S. M. ஸௌந்தரராஜாசாரியார், வைத்யவிசாரத ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி இருவர்களுக்கும் நிர்வாஹஸமிதி தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. மேற்கொண்டு மற்ற இரு பாகங்களையும் வெளியிடுவதற்கான பொருளாதாரம் முதலிய எல்லா ஏற்பாடுகளையும் தனித்துச் செய்ய மேற்கூறிய ஆசிரியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. மஹாமண்டலத்தின் பொது நிதியிலிருந்து இப்புத்தக வெளியீட்டிற்குப் பொருள் செலவழிக்கக் கூடாது. (புத்தக வெளியீட்டிற்கென தனித்து வரவு செலவு கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும்).

3. ஆயுர்வேத மத்ய ஆராய்ச்சிக்குழுவினர் ஏற்கனவே தீர்மானித்து வெளியிட்டுள்ளபடி மத்ய ஆயுர்வேத கவுன்ஸிலை அகில இந்திய ரீதியில் உடனடியாக ஸ்தாபிக்கவும், ராஜ்யவாரியாக தனித்தனியாக கலாசாலைத் திட்டங்களையும் கல்வித் திட்டங்களையும் பல்வேறு மாறுதல்களுடன் ஆங்காங்கு நிறுவுவதைத் தடுக்கவும், அகில இந்திய ரீதியில் ஒரே தரத்தில் எல்லா ராஜ்யங்களிலும் அனுஸரிக்கத் தக்கவாறு நல்ல நிபுணர்களைக் கொண்டு பாடதிட்டம் கலாசாலைநிர்வாஹம் வைத்யத்துறை நிர்வாகம் முதலிய விஷயங்களுக்கான திட்டங்களை உடனடியாக ஆயுர்வேத மத்ய கவுன்ஸில் மூலம் வெளியிடச்செய்யவும் மத்ய சர்க்காரைக் கோரத் தீர்மானிக்கப்பட்டது.

4. மத்ய கவுன்ஸில் மூலம் வெளியிட உத்தேசித்துள்ள ஆயுர்வேத பார்மகோபியாவையும் பாட மூல புத்தகங்களையும் முதலில் ஸம்ஸ்கிருதத்தில் தொகுத்துப் பிறகு ஆங்கிலத்திலும் மற்ற ராஜ்யப் பிரதேச பாஷைகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுவதுதான் நல்லது என மத்ய ஆயுர்வேத ஆராய்ச்சிக் குழுவிற்குச் சிபார்சு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

5. ஆயுர்வேத மருந்து உற்பத்திசாலைகளை Drugs Act 1944-ன் கீழ் கண்காணித்து மருந்துகளின் தர நிர்ணயம் செய்ய மத்ய அரசாங்கம் யோசித்து வருவதை இந்த ஸமிதி மிகுந்த கவனத்துடன் பரிசீலித்து ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கான தற்போதைய சூழ்நிலைப்படி, தற்போதுள்ள டிரக்ஸ் ஆக்ட்

சட்டதிட்டங்களுக்கு உட்படுவதால், ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பல கேடுகள் விளையுமானதால், ஆயுர்வேத மருந்து உத்பத்தி — மருந்து தர நிர்ணயத்திற்கான தனித்த ஔஷதக் கட்டுப்பாடு சட்டம் இயற்றி அதன் அமுலை தகுந்த ஆயுர்வேத நிபுணர்களிடம் ஒப்படைக்குமாறு மத்ய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

வேறு அவஸர விஷயம் ஒன்றும் கொணரப்படவில்லை.

* * *

## திருச்சி ஆயுர்வேத ஸபை

திருச்சி ஆயுர்வேத ஸபையின் மாதாந்தர தத்வித்யஸம் பாஷாபரிஷத் கூட்டம் சென்ற 21—12—1960 புதன்கிழமை மாலை 4-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் ஸ்ரீரங்கம் வைத்யபூஷண ஸ்ரீ P. G. கணபதி சாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றது. தஞ்சை ஸரஸ்வதிமஹால் ஆயுர்வேத நூல் ஆராய்ச்சியாளர் ஸ்ரீ S. வெங்கடராஜன் L. I. M. அவர்கள் விஷ வைத்யம் என்ற பொருள்பற்றிப் பேசினார். பாம்பு தேள் முதலிய விஷ ஜந்துக்களின் உற்பத்தி, உட்பிரிவு, விஷத்தின் தன்மை, மாற்றுமுறைகள் இவைகளைப் பற்றி சரகஸுச்ருதஸம் ஹிதைகளிலிருந்தும் அகஸ்தியர் சர்பாரூடம் சித்ராரூடம் முதலிய நூல்களிலிருந்தும் உள்ள ஆதாரக் கோட்பாடுகளுடன் அவர் பேசியது மிகவும் சிறப்பாக இருந்தது. ஸபையின் காரிய தர்சி ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

## ஆயுர்வேதஸபை ஆண்டுவிழா

திருச்சி ஆயுர்வேத ஸபையின் 27-வது ஆண்டுவிழா ஜனவரி 29உ யன்று புதுக்கோட்டையில் ஸபைத் தலைவர் ஸ்ரீ பி. விச்வநாத சர்மாவின் லக்ஷ்மீ டிஸ்பென்ஸரியில் நடைபெறுகின்றது. மத்ய ஆயுர்வேத பார்மகோபியா கமிட்டி, யோகாசன விசாரணைக் கமிட்டி முதலியவைகளின் அங்கத்தினரும், முன்னாள் சென்னை இந்திய வைத்யக் கல்லூரியின் ஆயுர்வேதப் பேராசிரியரும், சென்னை இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்தாபனத்தின் நிர்வாஹக் குழுத் தலைவருமான ஸ்ரீ வி. நாராயணஸ்வாமி அய்யர் H P. I M. அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள்.

# பட்டினியால் உடல் நிறைக்குறைவு

தொடர்ந்து உண்ணாவிரதம் முதலிய வகையில் பட்டினி கிடப்பதால் உடலில் தாதுபாக பரிணாமங்களுக்குத் தேவை யான உணவு வெளியிலிருந்து உட்செலுத்தப்படாததால், உடலில் சேமிக்கவைக்கப்பட்டுள்ள கபாம்சமான தாதுக்களே மற்ற தாதுக்களுக்கு ஆஹாரமாகி உடல் இளைக்கவும் நிறை குறையவும் ஆரம்பிக்கின்றன. இந்நிலையைக் குறிப்பிடும்போது வாக்படர்,

**आहारमग्निः पचति दोषानाहारवर्जितः ।**

**धातून्क्षीणेषु दोषेषु जीवितं धातुसंक्षये ॥** அ 2- ஹிருதயம் சி.10.

ஆஹாரத்தைப் பக்குவப்படுத்தும் ஜடராக்னி, உணவு கிடைக் காதபோது உடலில் சேர்ந்துள்ள கபாம்சமான ஆமம் அதிகமாக உள்ள மேதஸ் முதலியவைகளை தனது எரிப்பிற்கு விறகாக ஆக்கிக்கொள்கின்றது. அவையும் குறைந்தபின் உயிருக்கே ஆபத்து வருகிறது எனக் கூறுகிறார். அதனால்தான் லங்கன சிகித்ஸை செய்யும்போது லங்கனத்தின் ஓர் அம்சமான உபவாஸம் முதலியவைகளின் அளவை

**प्राणाविरोधिना चैनं लंघनेनोपपादयेत् ।** ச. சி. 3.

எனக் குறிப்பிடுகிறார்கள். உடல் வலிவிற்குக்குறைவு ஏற்படா வண்ணம் உபவாஸங்களிருத்தல் தகும். தற்காலத்தில் அரசியல் சூழ்நிலை முதலிய விஷயங்களில் சில நிர்பந்தங்களை ஏற்படுத்த ஒருவன் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முற்படுகிறான். அப்போது அவன் சரீரத்தில் ஏற்படும் க்ஷயம் எத்தகையது என்பதை ஆராயலாம்.

உபவாஸம் ஆரம்பித்த உடனேயே முதலில் எடை கிரம மாகக் குறைகின்றது. உடற்சூடு முதலில் அதிகமாகின்றது. பிறகு கிரமமாகக் குறைகிறது. ஆமபாகத்திற்காகவும் தாது பாகத்திற்காகவும் பாசகபித்தம்—தாத்வக்னிகள் தீவிரமாக முற்பட்டுப் பிறகு தணிகின்றன. இந்தத் தாபத்தைக் குறைக் காமல் ஏதாவது செயற்கையாக சூட்டைச் சற்று அதிகமாக்கி வளர்த்தால் உடல் தேய்வு தாமதப்படும். உடலில் ஜலாம்சம் வரவரக் குறையும். இதைத் தவிர்க்க ஜலம் மாத்திரம் குடித்து வந்தாலும் தேய்வைச் சிறிதளவு குறைத்துவிடலாம். யௌவன வயதிலுள்ளவனைவிட கிழவனுக்குச் சீக்கிரம் தேய்வு ஏற்படுகின்றது.

சரீரத்திலுள்ள ஆம அம்சங்கள் அனைத்தும் முதலில் பாகமாகி மலமான அம்சங்கள் மிகக்குறைவாக வெளியேற்றப்படுகின்றன. பிறகும் உணவு கிடைக்காவிடில் உடலில் மேதஸ் அனைத்தும் பாகமடைகின்றது. அதுவும் குறைந்ததும் சரீரத்திலிருந்து போஷகமாக விருக்கும் மலாம்சங்களும் பாகமடைந்து வரண்டுவிடுகின்றன.

தாதுக்கள் குறையும்போது சிற்சில அவயவங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. உடலில் தாரணத்திற்கு முக்கியமான ஹிருதயம் யகிருத் முதலிய அங்கங்கள் தளராதிருக்கும்படி மற்ற அவயவங்கள் பாசகாக்னிக்கு விருந்தாகின்றன. அதனால் சாகும்வரை ஹிருதயத்திற்குத் தேய்வே ஏற்படுவதில்லை. இதை ஆராய்ந்த Voit என்பவரின் கணக்குப்படி உடல் தேய்வு இவ்விதம் சதவிகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| எலும்பு | 5·4 | அண்டகோச கிரந்தி | 0·1 |
| தசை | 42·2 | குடல் | 2·0 |
| கல்லீரல் | 4·8 | மூளை | 0·1 |
| விருக்கம் | 0·6 | தோல், கேசங்கள் | 8·8 |
| மண்ணீரல் | 0·6 | மேதஸ் | 26·2 |
| அக்னியாசயம் | 0·1 | ரக்தம் | 3·7 |
| ச்வாஸாசயம் | 0 3 | மற்ற எல்லா அவயவங்களின் தாதுக்கள் | 5·0 |
| ஹிருதயம் | 0·0 | | |

நாட்பட்ட நோய்களில் அரோசகம் அக்னிமந்தம் முதலியவைகளால் தேவையான அளவில் உணவு உட்செலுத்தப்படாவிடில் உடலின் முக்கிய ஜீவனமான ஆசயங்களுக்கு வலுக்குறைவு ஏற்படாதிருக்க புறத்தவயவங்கள் பாதிக்கப்படுவது காரணமாக முதலில் தோல் கேசங்கள் முதலியவை பாதிக்கப்படுகின்றன. தலைமயிர் உதிர்தல், வளர்ச்சிக்குறைவு, நிறம் மங்குதல் முதலியவை ஏற்படுகின்றன. அங்கும் கிரமமாக கபாம்சமான தாதுக்கள் பாகமடைந்து குறைவதால் உடல் தேய்வும் நிறைக்குறைவும் கிரமமாக ஏற்படுகின்றன. தாதுக்களும் கபபித்த தோஷங்களும் குறையும் நிலை வாயு வளரப் போதுமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது. தாது க்ஷயம் வாதப்பிரகோபத்திற்கு முக்கிய காரணம். தாது பாகத்திற்கு வேண்டிய உணவு கிட்டாது தனித்து எரிந்துகொண்டிருக்கும் அக்னியை முதலில் தாதுக்ஷயத்தால் விருத்தியடைந்த வாயு அதிகப்படுத்திவிட்டாலும், விறகுக் குறைவால் அக்னி சக்தி

குறைந்து விடுகின்றது. இதையே ஆஹாரத்தில் ஹீநயோக லக்ஷணம் குறிப்பிடும் போது சரகர் கூறுகிறார்.

**तत्र हीनमात्रमाहारराशिं बलवर्णोपचयक्षयकरं उदावर्तकरं अनायुष्यवृष्यं अनौजस्यं शरीरमनोबुद्धीन्द्रियोपघातकरं सारविघमनं अलक्ष्म्यावहं अशीतेश्च वातविकाराणामायतनं आचक्षते** ।-*சரக. விமானம் 2 அ.*

*[மூலம்-சரகஸம்ஹிதை-அஷ்டாங்கஹிருதயம்-ஆயுர்வேதீயகிரியாசாரீரம்.]*

---


# ஆயுர்வேத ஸாரம்

**கிடைக்குமிடங்கள் :—**

1. **தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**
*தலைமைக்காரியாலயம், 18. சின்னக்கடைத் தெரு, திருச்சி-2.*

2. **திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிட்,.**
*விற்பனை டிப்போ, 31 A. சின்னக்கடைத் தெரு, திருச்சி.*

3. **ஸ்ரீவிலாஸ புஸ்தகசாலை,**
*கீழச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.*

4. **வைத்ய ஸ்ரீ P. விச்வநாத சர்மா,**
*லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி, கீழராஜ வீதி, புதுக்கோட்டை.*

5. **வைத்ய ஸ்ரீ R. K. பழனியப்பா,** H. I. M. S.
*ஞானவத்ஸலா வைத்யசாலை, செவ்வாப்பேட்டை, சேலம்.*

6. **வைத்ய ஸ்ரீ T. K. V. ஸுப்ரமண்யம்,**
*18. மேட்டு அக்ரஹாரம், சேலம்.*

7. **ஸ்ரீ M. ராஜா பிள்ளை,**
*மருந்துச் சரக்கு வியாபாரம், பஜார் ஸ்டிரீட், சேலம்.*

# திரிதோஷ வர்க்க அமைப்பு

["ஆயுர்வேத ஸாரம்" என்ற மஹாமண்டல வெளியீட்டு நூலில் கண்ட விஷயங்களுக்கு விளக்கமளிக்கும் சில அம்சங்கள் இங்கு தரப்படுகின்றன.]

வாத பித்த கபங்களின் சாஸ்திரீயமான ஸித்தாந்தங்களை மனதிற்கொண்டு நோக்கும்போது வாயு-பித்தம்-கபம் என்று தனிப்பட்ட ஒரு பொருள் இருப்பதாகக் கூறுவதைவிட சரீரத்தில் உள்ள பல அம்சங்களில ஒரே விதமான தன்மையுடையதும், ஒரே தன்மையுடைய பொருளால் அல்லது செயலால் அளவில் அதிகமாகியோ குறைந்தோ போவதும், ஆனால் தனித்தனி உருவில் இருப்பதுமான பொருள்கள் அனைத்தும் ஒரே வர்க்கத்தில்—தொகுப்பில் தொகுக்கப்பட்டு வாயு (வாயுவர்க்கம்) பித்தம் (பித்தவர்க்கம்) கபம் (கபவர்க்கம்) என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளன என்றே புலப்படுகிறது. இதை ஆராய்வோம்.

உலகில் எந்தப் பொருளை நோக்கினாலும் அதன் உற்பத்தியிலும் இருக்கையிலும் மூன்று பொருள்கள் தேவைப்படுகின்றன. (1) அதன் உற்பத்தியிலும் இருக்கையிலும் நேரிடையாகப் பங்கு கொள்ளும் பொருள். (2) அந்தப் பொருளைத் தேவையானபடி உபயோகப்படத் தகுதி கொடுக்கும் பொருள். (3) அந்தச் செயலைச் செயலாற்றவும் கட்டுப்படுத்தவும் உள்ள பொருள். இந்த மூன்று செய்கைகளில் சிலசமயம் ஒரே பொருளே இரு செயல்களைக்கூட செய்வதாக இருப்பினும் இந்த மூன்று நிலைகள் தனித்து அவசியம் தேவைப்படுகின்றன.

நமது சரீர உற்பத்தி—ஸ்திதியிலும் இந்த மூன்று பொருள்கள் தேவை. முதலில் சரீரத்தில் பிரதிக்ஷணமும் உற்பத்தியும் புஷ்டியும் தேய்வை ஈடுசெய்யும் தன்மையுள்ள பொருள் தேவையாக இருக்கிறது. இரண்டாவதாக உற்பத்தி—புஷ்டிக்கான பொருள்களைத் தேவைக்கேற்றவாறு—சரீரத்திற்கொத்தவாறு மாற்றி அமைத்துக் கொடுக்கும் பொருள் அவசியமாகிறது. மூன்றாவது இந்த இருவகைப் பொருள்களின் அளவையும் அதன் செய்கைகளின் அளவையும் கட்டுப்படுத்தும் தன்மையுள்ள பொருள் தேவையாக இருக்கின்றது. சரீர யந்திரத்தில் இத்தகைய பொருள்களாக விளங்குபவை கப பித்த வாதங்களாகும்.

சரீரத்திலுள்ள அளவு கடந்த ஸூக்ஷ்மமான கோசங்களைத் தன் தன் இயற்கைச் செயல்களைப் புரியச் செய்ய இடைவிடாது அவைகளின் தேய்வைப் பூர்த்தி செய்து புஷ்டி பலமளிப்பது உணவின் ஸாரமான ரஸதாதுவெனினும், அந்த ரஸதாதுவின் பரம ஸூக்ஷ்மாம்சமான கபம்தான் இப்பணியில் முக்கியமாகும். இதைத் தவிர ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவு மிருந்து இந்த கப கார்யத்தைச் செய்பவையனைத்தும் கபமே. ஆக, கபமானது புஷ்டி, நிறைவு, நெய்ப்பு, பலம் (களைப்பை நீக்குவது, ரோகத் தடுப்பு சக்தியை அளிப்பது) இவைகளை அளிக்கிறது. உடலிலுள்ள கபாம்சம் தகுந்த அளவில் இருந்தால் உடலில் பித்தத்தால் ஏற்படும் தேய்வையும் வாதத்தால் ஏற்படும் வரட்சியையும் ஈடு செய்கிறது.

போஷணத்திற்காகவும் தேய்வை நிரப்புவதற்காகவும் கிடைக்கும் கபப்பொருளை சரீரத்திலுள்ள போஷ்யமான அணு கோசங்களுக்கேற்றவாறு மாற்றிப் பக்குவப்படுத்திக் கொடுப்பது பித்தமாகும். பித்தம் புரியும் இந்தச் செயல் பாசனமாகும். இதன் விளைவே உடலின் சூடும் எரிவும்.

கபபித்தங்களை அந்தந்த ஸ்தானத்திற்குக் கொணர்ந்து அவைகளின் செயலைக் கட்டுப்படுத்தி உதவுவது வாயுவாகும்.

இம் மூன்று அம்சங்களையும் சரீரத்தின் ஒவ்வொரு பரமாணுவிலும் பார்க்க முடிவது போல, யக்ருத்-பிலீஹம், புப்புஸம், ஹிருதயம் போன்ற பெரிய ஆசயங்களிலும், தலை உடல் கை கால்கள் ஆகிய உறுப்புகளிலும் காணலாம்.

நவீன வைத்ய பரிபாஷையில் இதை விளக்கும்போது, சரீரத்தில் உள்ள பல்வேறு நர்வ் எனப்படும் நரம்புகள் எந்த வாயு அல்லது அதற்குச் சமமான பொருள்கள் இருப்பதால் வேலை செய்கின்றனவோ; அந்தப் பொருள் அனைத்தும் வாயுவின் ஒரு அம்சமாகும். முகம், வயிறு, சரீர பரமாணுக்கள் இவைகளில் உணவு-ரஸம் ரக்தம் முதலியவைகளைப் பாகம் செய்யும் என்ஸைம் முதலிய எல்லா பாசகப் பொருள்களும் பித்தத்தின் அம்சங்கள். சரீரத்தில் நெய்ப்பும் புஷ்டியும் பலமுமளிக்கும் எல்லா அம்சங்களும் ச்லேஷ்மா (Inter cellular material) புரதம், லைபாய்ட் (Lipoid) ச்லேஷகம் (Synovial fluid) தர்பகம் (cerebro-spinal fluid) முதலியவை கபத்தின் அம்சங்கள்.

ஆக இந்த நோக்கில் வாயு பித்தம் கபம் இம் மூன்றும் சரீரத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பைக் குறிப்பதாக அமையும். ஒரு

தனிப்பட்ட பொருளின் பெயரல்ல என்பது விளங்கும். இயற்கையாகவும் வியாதி நிலையிலும் இந்த வகுப்பு செயலாற்றும் போது ஏற்படும் ஒற்றுமையைக் கொண்டும், இவைகளை வளர்க்கவும் குறைக்கவும் உதவும் ஆஹார விஹாரங்களின் ஒற்றுமையைக் கொண்டும், இவை வாயு வர்க்கத்தைச் சேர்ந்தவை, இவை பித்த வர்க்கத்தைச் சேர்ந்தவை, இவை கப வர்க்கத்தைச் சேர்ந்தவை என்றவாறு ஊஹிக்க முடிகிறது. இந்த கருத்திற்கு ஆயுர்வேத மூல நூல்களில் ஆதாரம் காணேம். ஆனல் ஹரிவம்சத்தில் உள்ள கீழ்க்கண்ட வாக்யம் இந்தக் கொள்கைக்கு இடமளிக்கிறது.

कफवर्गे भवेच्छुक्लं पित्तवर्गेच शोणितम् ।

கபவர்க்கத்தையும் பித்த வர்க்கத்தையும் குறிப்பிடும் இந்த ச்லோகத்தைக் கொண்டு வாத வர்க்கத்தையும் அனுமானிக்க முடியும். இந்த வர்க்கப் பிரிவினையை மனதிற்கொண்டு வாத பித்த கபங்களின் லக்ஷணங்களைக் கூறும் ஆயுர்வேதத்தின் வாத பித்த கப லக்ஷணங்கள் விஸர்க்கம் ஆதானம் விக்ஷேபம் என்று தொகுக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

பல பொருள்களை அதன் குண கர்மங்களின் ஒற்றுமையை ஒட்டி ஒரே வர்க்கமாகக் கொண்டது, சிகித்ஸையில் ஏற்படக் கூடிய ஸௌகர்யத்தை ஒட்டியதே என நினைக்க விடமிருக்கிறது. இவ்விதம் செயலாற்றலில் உள்ள ஸௌகரியத்திற்கு வர்க்கப் பிரிவு செய்வது ஆயுர்வேத ஆசாரியர்கள் எப்போதும் கையாள்வதே. இதன் மற்றொரு உதாரணம்: மர்மப் பிரகரணத்தில் பார்க்கலாம். பற்பல வகையில் அடங்கிய மர்மங்களை செயல் புரியும் குண கர்ம விசேஷங்களை ஒட்டிப் பிரித்திருப்பது இவ்வகைப் பட்டதாகும்.

யோக நூல்களிலும் வேதத்திலும் வாயுவிற்கு மூளை இருப்பிடமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சிகித்ஸை யுக்தியை யொட்டி பக்வாசயம் முதலியவைகளை முக்கிய ஸ்தானமாக ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது. அவ்விதம் மூளை சைதன்யத்திற்கு ஸ்தானமாயினும் ஹ்ருதயமே சேதனஸ்தானமெனக் குறிப்பிடுவதும் சிகித்ஸா யுக்தியை யொட்டித்தான்.

வாதபித்த கபங்களே முன் குறிப்பிட்ட மூன்றுவிதப் பணிகளைச் செய்யவேண்டியிருப்பதால், இப்பணிகள் சரீரத்தின்

ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மமான அணுக்களிலும் நடைபெற வேண்டியிருப்பதால் அந்தந்த ஸூக்ஷ்ம அணுக்களிலும் அதைவிட பரம ஸூக்ஷ்மமாக வாத பித்த கபங்கள் ஸஞ்சரிக்க வேண்டியிருக்கிறது. இதனால்தான் சரீரத்திலுள்ள குழாய்களின் அணுக்களிலும் வாத பித்த கபங்கள் ஸஞ்சரிக்கின்றன என ஆயுர்வேதத்தின் கொள்கை.

ஆனாலும் இவைகளுக்கென எல்லை வகுக்கப்பட்ட சில ஸ்தானங்களும் உண்டு. வாத பித்த கபங்களை ஐவகைப் படுத்தி அவைகளின் இருப்பிடத்தைக் குறிப்பிட்டுள்ளதும், வாத வர்க்கம், பித்த வர்க்கம், கப வர்க்கம் எனப் பிரிக்கப்பட்டுள்ள உடலிலுள்ள பொருள்களின் செய்கை இந்த ஸ்தானங்களில் இந்த விசேஷத் தன்மையுடன் புலப்படுகின்றன என்பதையே தெளிவாக்குகின்றது. வாயுவின் பிராண வாயுவாக இருக்கும் விசேஷத் தன்மை கண்ட ஸ்தானத்தில் நன்கு புலப்படும். அங்கு செய்யப்படும் அதற்கான சிகித்ஸை நல்ல பலனளிக்கும். அம்மாதிரியே பிராஜகம் என்னும் பித்த சக்தியை பிராஜக பித்த ஸ்தானமான தோலில் நன்கு காணலாம். அந்த சக்தியின் புஷ்டியோ குறைவோ அந்த விடத்தில் சிகித்ஸை செய்வதால் ஏற்படுவது என்றவாறு சிகித்ஸா யுக்திக்கான வைகாரிக ஸ்தான நிர்தேசம் எனப்படும். இந்த ஐவகைப்பட்ட வாத பித்த கபங்களின் ஸ்தானத்தைத் தவிற வேறு சில குறிப்பிட்ட இடங்கள் உள்ளன. உடலில் தோஷங்கள் எங்கு பிரகோபமடைந்தாலும் வியாதியை உண்டாக்குகின்றன வெனினும், இவ்விடங்களில் நோய்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதே இவ்விடங்களின் முக்கியத்துவம். வாயுவின் பிரதான லக்ஷணம் வலி. ஆனால் இந்த வலி மென்னி இடுப்பு கணுக்கால் முதலிய இடங்களில் அதிகமாக ஏற்படுகின்றது. அதனால் இவ்விடங்கள் வாதத்தின் இருப்பிடங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

அவ்விதமே வாயுவிற்குப் பக்வாசயமும், பித்தத்திற்கு ஆமபக்வாசயங்களும், கபத்திற்கு மார்பகமும் பிரதான ஸ்தானமாக வர்ணிக்கப்படுகின்றன. இந்த ஸ்தானங்கள் சில முக்ய விஷயங்களை சிகித்ஸைக்குப் புலப்படுத்துகின்றன. தோஷங்கள் சயம் அடைவது எனும் அளவில் அதிகமாவது இந்த ஸ்தானங்களில் தான். இந்த சயநிலை மிகவும் அதிகமானால் அந்த தோஷம் பிரகோபமடைந்து வெளிக்கிளம்பி மற்ற இடங்களில் பரவி அந்தந்த நோய்களை உண்டாக்குகின்றது. அதனால் சய நிலையிலேயே சிகித்ஸை செய்யமுடிந்தால் அளவில் அதிகமாகும்

தோஷத்தை வமன விரேசன பஸ்தி சிகித்ஸைகளாலேயே அகற்ற முடியும். இந்த சிகித்ஸாயுக்தியை உத்தேசித்தே வாத பித்தங்களுக்கு பக்வாசயம், ஆமபக்வாசயம், மார்பகம் மூன்றையும் விசேஷ இருப்பிடங்களாகக் குறிப்பிட்டதன் காரணமாகும்.

வமனத்தின் மூலமாக ஆமாசயத்திலிருந்தோ, சுவாஸாசயத்திலிருந்தோ வெளியாவதைக் கபம் என்கிறோம். விரேசனத்தின் மூலம் குடலிலிருந்து வெளியாகும் நீரை பித்தம் என்கிறோம். குதவழியே வெளியாகும் காற்றை வாயு என்கிறோம். ஆனால் சரீரத்தின் பல்வேறு அங்கங்களில் உள்ள வாத-பித்த-கபவர்க்கத்தைச் சார்ந்த பொருள்களே இந்த வமன விரேசன பஸ்திகளால் அகற்றப்படுகின்றன என நிரூபிக்க முடியாது. இருந்தாலும் இந்த வமனம் முதலிய சிகித்ஸைகளால் கப பித்த வாயு நோய்கள் நீங்குகின்றன என்பது அனுபவ சித்தம். இந்த வமனாதிகளின் மூலம் வெளியான வாத பித்த கபங்கள் தான் வியாதி காரணமெனக் கொண்டு சிகித்ஸை செய்தபோதிலும் வியாதி தீர்கிறது. அதனால் இவைகளுக்கும் ஸர்வாவயவ வியாபியான வாத பித்த கபங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்த மலவாதம் முதலியவை அதிகமானால் அவை அதிகமாவதும் இவை குறைந்தாலும் அவை குறைவதும் ஊஹிக்கக் கூடியவையே. அதனால் வாதவர்க்கம் பித்தவர்க்கம் கபவர்க்கம் எனக் குறிப்பிடும் பொருள்கள் விருத்தி நிலையை அடைந்து ரத்தத்தின் மூலம் உடலில் பரவிப் பாயும் போது, தன் தன் முக்ய ஸ்தானமாக பக்வாசயம் புப்புஸம் முதலியவைகளை அடையும்போது அவை மலமான வாத பித்த கபங்களாக மாற்றப்பட்டு வெளியேறுகின்றன என்றும் ஊஹிக்க முடியும். அதனால் தோஷஸஞ்சய ப்ரகோப நிலையை உணர இந்த மலமான வாத பித்தகபங்களுக்கு முக்கியத்துவமுண்டு. இந்த மலமான வாத பித்தகபங்கள் முக்கியமாக மஹாஸ்ரோதஸ் எனப்படும். உணவுக் குழாயையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அதனாலேயே மஹாஸ்ரோதஸ்ஸின் சுத்திக்காகப் பயன்படும் வமன விரேசன பஸ்திகள் சிகித்ஸையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

[ஆதாரம்—ஆயுர்வேதக்ரியாசரீரம்.]

# தோஷங்களின் மலநிலை

தோஷதாது மலங்களின் உற்பத்தியைக் கொண்டு நோக்கும் போது வாத பித்த கபங்கள் மூன்றும் மலங்கள் என்பது புலப்படும். ஒவ்வொரு தாதுவும் தன் புஷ்டிக்காகத் தனக்குக் கிடைத்த ரஸதாதுவின் பகுதியை தனது தேய்வை ஈடு செய்து புஷ்டியடைய உபயோகப்படுத்திக் கொள்கின்றன. இவ்வித உபயோகத்திற்குப்பின் மிகுதியுள்ள ரஸதாதுவின் அம்சத்தைத் தனக்கு உபயோகமில்லாததால் வெளியாக்கும் போது, வெளியாக்கப்பட்ட அம்சம் அந்த தாதுவின் மலமாகின்றது. இந்த மல நிலையடைந்த பாகத்தாலும் சரீரத்தில் தாரணமும்—புஷ்டியும் ஏற்படுகிறது. இந்த மலத்தால் புஷ்டியடையக்கூடிய பொருளை மலம் என்றே குறிப்பிடுகிறோம்.

வாத பித்த கபங்களின் உற்பத்தியும் புஷ்டியும் இவ்வகையில் தன் தனது தாதுவின் ஸாரமற்ற பொருளிலிருந்தும் துணைப்பொருளாக (Byeproduct) ஏற்படுகின்றது. மலமென்பதாலேயே தள்ளவேண்டியது — முழுவதும் உபயோகமற்றது என்ற பொருளல்ல. இந்த மலங்களும் ஸ்வஸ்த நிலையிலும் சரீரத்தைப் பாதுகாக்கக்கூடியவையே. இந்த ஆரோக்யநிலையில் உதவும் செயல்களைக் கொண்டே இம்மலங்களான வாத பித்த கபங்களை தாதுவென்றும் குறிப்பிடுகிறோம். இதே வாத பித்த கபங்கள் விஷமநிலையில் அதிகமாகியோ குறைந்தோ சரீரத்திற்கு நோய்களை உண்டாக்குகின்றன என்பதைக் கொண்டு தோஷங்கள் எனப் பெயர் ஏற்படுகின்றது.

உண்ட உணவு ஜடராக்னியால் பாகமடைந்து ஸாரம்-கிட்டம் (மலம்) எனப் பிரிபடும்போது, கிட்டம் புரீஷமாகவும் வாயுவாகவும் பிரிபடுவதும், ரஸதாது பாகமடைந்து ஸாரமாகவும் கிட்டமாகவும் பிரிபடும்போது கபம் கிட்டமாக நிற்பதும், ரக்த தாதுவாகி பாகமடையும் போது கிட்டமாக பித்தம் ஏற்படுவதும், சரீர க்ரியா விக்ஞானத்தில் விளக்கப்பட்டுள்ளன. ஆக உற்பத்தியின் நோக்கில் இவைகளை மலமாகக் கொண்டனர். ஆனால் மற்ற மலங்களைக் காட்டிலும் தனிப்பட்ட ப்ராக்ருத-வைக்ருதச் செயல்களைப் புரிவதை உத்தேசித்து இவைகளைத் தனித்து ஒரு வர்க்கமாகக் குறிப்பிட்டனர். அதிலும் ப்ராக்ருதச் செயல்களான ஆரோக்யத்தைப் பாதுகாத்து தேகத்தை வளர்க்கும் செயல்களைக் கொண்டு இவைகளை தாதுக்கள் என்றனர். இதெல்லாவற்றையும் காட்டிலும் வியாதி

உற்பத்தியிலும் மற்ற தாதுக்களையும் மலங்களையும் சீக்கிரமே தூஷணம் செய்யும் தன்மையைக் கொண்டு தோஷங்கள் என்ற நிலைக்கும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் தூஷண ஸ்வபாவத்தை சதா கவனித்துக்கொண்டே வருவதும் ஸமநிலையில் நிலைநிறுத்துவதுமே ஆரோக்யத்திற்குத் தகுந்த பாதுகாப்பு என்ற நினைவால் இதன் தூஷண ஸ்வபாவமே எப்போதும் கவனத்திலிருக்கவேண்டுமென்று தோஷங்கள் என்றே பெயர் நிலைத்துவிட்டது.

ஜடராக்னியோ ரஸாக்னியோ ரக்தாக்னியோ மந்தமாகும் போதுதான் கிட்டபாகம் அதிகமாகி, வாத கப பித்தங்கள் அதிக அளவில் உற்பத்தி அதிகமாகின்றது என்பதும் குறிப்பிடத் தக்கது. அதனால்தான் **सर्वेऽपि रोगा मन्देऽग्नौ** எல்லா நோய்களும் அக்னிமந்தத்தால் ஏற்படுபவை என்ற குறிக்கோள் ஏற்பட்டுவிட்டது.

[நிதான சிகித்ஸா ஹஸ்தாமலகம்]


## 'மார்தண்ட' ஆயுர்வேத இஞ்சக்ஷன்கள்

மார்த்தண்ட ஔஷத சாலையின் விசாலமான ஸமசீதோஷ்ண வசதி பெற்ற ஔஷத நிர்மாண சாலையில் உயர்தரமான தானாகவே இயங்கக் கூடிய பல மெஷின்கள் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளன.

இவ்வியந்திரங்கள் மூலமாக விஞ்ஞானரீதியில் தகுதி பெற்றவர்களும் அநுபவமுள்ளவர்களுமான ஆராய்ச்சி நிபுணர்களின் மேற்பார்வையில் அரசாங்க அனுமதியுடன் சட்டதிட்டங்களுக்குட்பட்டு இஞ்சக்ஷன்கள் தயார் செய்யப்பெற்று சோதனைகளுக்குமுட்பட்டு வெளிவருகின்றன. மார்த்தண்டவின் மருந்துகள் சீக்கிரத்தில் குணமளிக்கின்றன. நாள் நிற்பவை. ஸ்திரமான லாபமளிப்பவை. இந்த இஞ்சக்ஷன் மருந்துகள் அகில இந்தியாவிலும் பதினாயிரத்துக்கும் மேற்பட்ட ஏஜண்டுகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. ஆராய்ச்சிக்கு உதவும் விஷயங்களடங்கிய விற்பனை ஜாபிதாவை எழுதிப் பெறுங்கள்.

கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

**MARTAND PHARMACEUTICALS.**
**(Research Institute of Indian Medicines)**
**BARAUT S. S. Rly. (U P.)**

# ஆயுர்வேத யோக புஸ்தகம்.

## தயாரிப்பில் கவனிக்க வேண்டியவை.

**(Suggestions in compiling Ayurvedic Pharmocopeia)**

[V. B. நடராஜ சாஸ்திரி.]

*ஆயுர்வேத ஆராய்ச்சி ஸெண்டிரல் கௌன்ஸில் ஆயுர்வேத யோகபுஸ்தகம் புதிதாகத் தயாரிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறதாக 15—12—1960 ஹிந்து பத்திரிகையில் வெளியான செய்திக் குறிப்பிலிருந்து தெரிகிறது. இது மிகவும் முக்கியமானது, அவசியமானது, வரவேற்கத் தக்கது.*

*ஸம்ஸ்கிருதத்திலும், பாரதத்தின் முக்கியமான எல்லாப் பிராந்திய பாஷைகளிலும், இங்கிலீஷிலும் கூட குணபாடங்களும் யோகபுஸ்தங்களும் ஏராளமாய் இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் இவை ஒன்றும் இன்றைய சூழ்நிலையில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை. ஆதலால் பழைய மருந்து யோக நூல்களை பிரதிஸம்ஸ்காரம் செய்து புதிய முறையில் அமைக்கவேண்டியது மிக அவசியம் என்பதில் ஸந்தேஹமில்லை.*

**புதிய யோகபுஸ்தகத்தின் பாஷை.**

*இந்நாளில் புதிய பாடதிட்டத்தில் ஆயுர்வேதம் பயிலுபவர்கட்கு ஸம்ஸ்கிருதத்தில் பரிசயம் மிகக் குறைவானதால், ஸம்ஸ்கிருதத்தில் இருக்கும் ஔஷதயோகங்கள் இன்று பிரயோஜனப்படாது. பிராந்திய பாஷைகளில் எழுதப்பட்டிருக்கும் யோக நூல்களும் அகில பாரதத்தில் ஒரே ரீதியாகப் பின்பற்றும்படியாக இல்லை. ஆகவே அகில பாரதத்திலும் விதேசங்களிலும் ஓரளவு வியாபகம் பெற்றுள்ள ஆங்கிலமொழியில் ஆயுர்வேத யோக புஸ்தகம் புதிது எழுதி வெளியிட்டால், யோகபுஸ்தகம் இல்லாக்குறை நிவிருத்தியாகிவிடும்— என்று யோஜித்து ஆயுர்வேத ஆராய்ச்சி ஸெண்டிரல் கௌன்ஸில் ஆயுர்வேத யோக புஸ்தகத்தை ஆங்கிலத்தில் தயாரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாக 15—12—60 ஹிந்துவில் காணும் செய்திக் குறிப்பிலிருந்து தோன்றுகிறது.*

*இது வாஸ்தவமாயின் பெரிய தவறுதலாகும். ஆங்கிலம் நமக்கு விதேசபாஷை என்பதால், ஆங்கிலத்தில் ஆயுர்வேத யோகபுஸ்தகம் எழுதக்கூடாது என்று நான் கூறவில்லை. ஆயுர்வேத சாஸ்திரம் சிகித்ஸை முறைகளை சீர்செய்து, ஒருவழிப்படுத்தி, எல்லாப் பிராந்தியங்களிலும் இருக்கும் பயிற்சி பெற்ற வைத்தியர்கள் அனைவரும் அநுஷ்டிக்கத் தக்கதாக, பிராசீன சாஸ்திரீய யோகங்களை இக்காலத்திற்கேற்றவாறு பிரதிஸம்ஸ்*

காரம் செய்து, முதன் முதலில் புதிதாகத் தயாரிக்க வேண்டியது இந்தப் புஸ்தகம். இது ஒரு மூலப்பிராமாணீக கிரந்தமாக விளங்கும்படி செய்ய வேண்டியது அவசியம். இவ்விதம் ஆயுர்வேதக் கிரந்தம் புதிதாக எழுத ஆங்கிலபாஷை தகுதியற்றது. தகுதியற்ற ஆங்கில பாஷையில் ஆயுர்வேத மூல நூல் எழுதச் செய்வதால் ஆயுர்வேதம் பயிலுபவர்கட்கும் ஆயுர்வேதசாஸ்திர அபிவிருத்திக்கும் அணு அளவும் பயன்படாது. குந்தகமே.

விஷயத்திற்கும் பாஷைக்கும் ஸம்பந்தமில்லை என்று எண்ண வேண்டாம். இங்கு விசாரம் செய்ய இடமில்லை. இந்தியாவில் நவீன விஞ்ஞானம் பயில ஆங்கிலம் இன்றியமையாதது என்ற விஷயத்தில் விவாதம் இல்லாததுபோல, ஆயுர்வேதம் நன்கு கற்க ஸம்ஸ்கிருதம் இன்றியமையாதது என்பதும் தீர்மானம் தான்.

பல ஆண்டுகளாக மத்திய ஸர்க்காரும் மாகாண ஸர்க்கார்களும் ஆயுர்வேதாபிவிருத்திக்கு என்ற லக்ஷ்யத்துடன் பணமும் காலமும் ஏராளமாய் செலவு செய்துள்ளார்கள். ஆரம்பத்திலிருந்து செய்த காரியங்கள் சரியான முறையில் இல்லையென்று 'விளைவு' ஐயமறக் காட்டியுள்ளது. ஆயுர்வேதம் பயில என்று ஆரம்பித்த பள்ளிகள் ஆலோபதிக் பள்ளிகளாகிவிட்டன. ஆலோபதிக் டாக்டர்களிடம் ஆயுர்வேத பாடதிட்ட அதிகாரத்தைக் கொடுத்தது, ஸம்ஸ்கிருதத்தை உதாஸீனம் செய்து ஆயுர்வேதத்தை ஆங்கிலத்தில் கற்பிக்கத் தொடங்கியது, ஆகிய இரண்டு மஹாமேரு மூடத்தனங்கள், ஆதியிலிருந்து இன்னமும் தொடருகின்றன. இத்தவறுதலை இத்துடனாவது நிறுத்தி, பிரதி ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட புதிய ஔஷத யோக புஸ்தகத்தை, மூலப்பிரமாணமாக முதலில், ஆயுர்வேதத்தின் ஸொந்த பாஷையான ஸம்ஸ்கிருதத்தில் தான் தயாரிக்க வேண்டும். இது தான் வைத்திய சாஸ்திர ஞானாபிவிருத்திக்கு உதவும். பிறகு தேவையுள்ளவர்கட்கும், லோகத்தில் பிரசாரத்திற்கும், உலகில் உள்ள மொழிகள் அனைவற்றிலும் ஆயுர்வேத யோக புஸ்தகத்தை அநுவாதம் செய்து கொள்ளலாம்.

இந்நாளில் ஆயுர்வேதம் பயில வரும் மாணவர்கட்கு ஸம்ஸ்கிருதத்தில் ஞானம் குறைவாயிருப்பதை உத்தேசித்து, குரு குல முதலிய ஆயுர்வேத பரிபாஷா பதங்களை ஸம்ஸ்கிருதத்திலேயே வைத்து இங்கிலீஷ் லிபியில் எழுதி, விவரண வர்ணனை மட்டும் இங்கிலீஷ் பாஷையில் தொகுத்து நூல்கள் சென்னை அரசாங்க ஆயுர்வேதப் பள்ளியில் எழுதப்பட்டுள்ளன. இந்த முறை

அந்தப் பள்ளிக்கூடத்தில் சேரும்பொழுது மாணவனுக்கு ஸம்ஸ்கிருதத்தில் இருந்த ஸ்வல்ப ஞானத்தையும் கபளீகரம் செய்துவிட்டது. அங்கு பள்ளியில் நுழைந்த பின்பு ஸம்ஸ்கிருத வாஸனைக்குத் தொடர்பு அறுக்கப்பட்டது தான் காரணம். S. S. L. C. முடிய தேசீய மொழியில் பயின்று வந்த மாணவனுக்கு P. U. C. யில் வந்ததும் விஞ்ஞானம் கணிதம் எல்லாம் ஆங்கிலத்தில் இன்று போதிக்கப் படுகின்றன. காலேஜ் கோர்ஸில் இங்கிலீஷில் ஞானம் வளருவதால் ஸப்ஜக்ட்ஸிலும் பையன்களுக்கு சிரமம் ஏற்படாது போய்விடுகின்றது. P.U.C. ஸம்ஸ்கிருதத்துடன் தேறினவனுக்குத் தான் ஆயுர்வேத வித்யாலயத்தில் பிரவேசம். இவனுக்குள்ள ஸம்ஸ்கிருத ஞானம் ஆயுர்வேத விஷயங்களை ஸம்ஸ்கிருதத்திலேயே அறிந்துகொள்ளப் போதுமானது. பரிபாஷா பதங்களை மட்டும் ஸம்ஸ்கிருதத்தில் வைத்து, விவரணம் இங்கிலீஷில் சொல்லுவது, பத பதார்த்த ஞான மேற்பட வழியற்று, மாணவன் பொட்டை நெட்டுறுத் தான் செய்யவேண்டும். சாஸ்திர விஷயத்தில் ஞானம் மங்குவதால், அதில் பையனுக்கு வெறுப்புத் தட்டுகின்றது. ஆயுர்வேதம் வேண்டாம். ஆலோபதி பார்க்கலாம் என்று ஆவல் படுகிறான். ஆயுர்வேதத்தை ஸம்ஸ்கிருதத்தில் படித்தால், படிப்பவர்களுக்கு விஷயங்களில் தெளிவான ஞானம் ஏற்பட்டு, மேல் மேல் ஆராய்ச்சியில் ஆவலும் உத்ஸாஹமும் உண்டாகும். P. U. C. ஸம்ஸ்கிருதத்துடன் தேறினவனுக்கு ஆயுர்வேதசாஸ்திரத்தை ஸம்ஸ்கிருதத்தில் போதித்தால் நிச்சயமாய் புரியும். தேவையானால், பிரவேச வருஷத்தில் ஸம்ஸ்கிருதமும் கொஞ்சம் கற்பித்து வந்தால் சிரம-ஸந்தேஹமேயிராது. ஆதலால் வைத்திய மாணவர்கட்கு விளங்காது என்று ஸந்தேஹம் கொள்ளத் தேவை யில்லை. ஆயுர்வேத யோக புஸ்தகத்தை சுத்த ஸம்ஸ்கிருதத்திலேயே பல மாகாணங்களிலிருக்கும் தகுந்த ஆயுர்வேத வித்வான்களைக் கொண்டு எழுதுவதுதான் உத்தமமாகும். இக்காலத்திய சூழ்நிலைக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யவல்லதாகும்.

## பொருளடக்கம்.

மஹா பண்டிதோத்தமர் ஸ்ரீ ஹரிப்ரபன்ன சர்மாவினுல் தொகுக்கப்பட்ட ரஸயோகஸாகரத்திலும், உன்ஜ்ஜா பார்மஸியினுல் பிரகாசம் செய்யப் பட்ட பாரத பைஷஜ்ய ரத்னபாண்டாகாரத்திலும் இல்லாத ஔஷதயோகம் ஸம்ஸ்கிருத பாஷையில் இல்லை. பிராந்திய பாஷைகளிலும் மருந்து யோகங்கள் ஸமுத்திரமாய் இருக்கின்றன. ஆனுல் இவைகளைப் பார்க்கும் புதிதாகப் பயின்ற வைத்தியர்கட்கு, எந்த வியாதிகளில் எந்த நிலை

களில், எந்த ஔஷதங்களை, எவ்விதம் பிரயோகம் செய்ய வேண்டும் என்று தெளிவே ஏற்படாது. குழப்பமும் இவனுக்குத் தலை சுற்றலும்தான் ஏற்படும். ஆகவே பெரிய யோகக் கிரந்தங்களிலிருந்து ஆங்காங்கு பொறுக்கி அந்தப் பழைய சைலியில் சிறிய யோகபுஸ்தகம் ஒன்று தயாரிப்பது பயன்படாது. கிருத தைலாதி கல்பம் வாரியாக யோகமும் செய்முறையும் எழுதி, இம்மருந்து இந்நோய்களில் பயன்படும் என்று எழுதுவது போதாது. முதலில், 5-6 மாகாணங்களிலிருந்து சாஸ்திர கர்மாப்பியாஸங்களில் நிபுணர்கள் சிலர் ஒன்று சேர்ந்து, ஸகல வியாதிகளிலும் அவஸ்தா விசேஷங்களை அநுஸரித்துப் பிரயோகம் செய்யவேண்டிய ஔஷதங்களை விமர்சித்து, நிச்சயம் செய்து கொள்ளவேண்டும். ரோகங்களுடைய அவஸ்தைகளை ஒட்டி ஔஷதப் பிரயோக விளக்கமும், சுருக்கமாய் ஔஷத யோக புஸ்தகத்திலும் ஒரு பகுதியாய் அமைக்கப்பட வேண்டும். பிரயோகமும் குணமும் ஓரளவு நிச்சயமாய் அறிந்த ஔஷதங்களுக்கு மட்டும் செய்முறைகள், மானங்கள் விளக்கமிருந்தால் போதுமானது.

முக்கியக் குறிப்பு: ஆயுர்வேத யோக புஸ்தகம் என்று பெயர் இருப்பதால், பிராசீன நவீன ஆயுர்வேதக் கிரந்தங்களில் ஏற்கனவே சொல்லாத ஔஷத யோகங்களை இதில் சேர்க்கக் கூடாது என்று சிறிதும் எண்ணி விடக்கூடாது ஆயுர்வேதத்தில் இன்று இருக்கும் மருந்துகளினால் வசம் செய்ய முடியாமல் ஸித்தம் யூனானி ஆலோபதி ஹோமியோபதி மருந்துகள் ஏதாகிலும் திருஷ்டபலமாய் சிலாக்கியமாய் இருப்பின் அம்மருந்துகளையும் செய்முறைகளையும் இப் புதிய ஆயுர்வேத யோக நூலில் ஆயுர்வேத கல்ப பரிபாஷைப்படி சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஏதோ அரசியல் சூழ்நிலையை அநுஸரித்து ஆயுர்வேதம் ஸித்தம் யுனானி மருந்து யோக புஸ்தகங்கள் தனியே வெளியிட்டாலும் சரி; மற்றவரின் விருப்பு வெறுப்பு எப்படியிருப்பினும் சரி; ஆயுர்வேதம் பற்றிய இந்தப் புதிய ஆயுர்வேத மருந்து யோக புஸ்தகத்தின் லக்ஷ்யம் எல்லா ரோகங்களுக்கும் தகுந்த சிகித்ஸைக்கு ஔஷதங்களை உபதேசிப்பது தான். ஆதலால் ஒரு புஸ்தகம் கொண்டே சிகித்ஸையின் லக்ஷ்யம் பூர்த்தி செய்யவும், ஆரம்ப நிலையிலிருக்கும் வைத்தியர்கட்குக் குழப்பமின்றி பூர்ண உபகாரமளிக்கவும் வல்லதாக இருக்கவேண்டும். இந்த ரோகத்தில் இந்த அவஸ்தையில் நமது ஆயுர்வேதத்தில் மருந்து இல்லை என்று ஸாதாரணமாய் ஏற்படவிடக் கூடாது. வேறு வைத்திய முறைகளிலிருந்து சேர்க்க வேண்டியிருக்கும் சிற்சில மருந்துகளை ஆயுர்வேத ஸித்தாந்

தப்படி தெளிவாக்கியே சேர்க்கவேண்டும் என்பதை மறக்கவே கூடாது. கைலாஸவாஸீ ஸ்ரீ யாதவஜீ திரிகம்ஜீ ஆசார்ய அவர்களுடைய ஸித்தயோக ஸங்கிரஹம் 'பூர்ணம்' என்று சொல்லும்படியாக இல்லையாயினும் ரோகாநுஸாரியாக ஔஷத யோகம் எழுதுவதற்கும், இதர வைத்திய முறை மருந்துகளை எடுத்துக் கொள்வதற்கும் நல்ல வழிகாட்டியாயும் அமைந்துள்ளது.

**மருந்து செய்முறை—(ஔஷத கல்பம்)**

யந்திர ஸாதனமின்றி ஔஷத நிர்மாணம் செய்ய முடியாது என்று இன்றைய காலநிலை ஏற்பட்டுவிட்டது. மிகப்பெரிய அதிக அளவில் மருந்துகள் செய்யவேண்டிய நிர்ப்பந்தம், செய்து பல நாட்கள் கிரமித்தும் தேச தேசாந்திரம் கொண்டுபோய் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. யந்திரங்கள் மூலம் செய்வதாலும், அதிக பாரியான அளவில் செய்வதாலும் ஔஷத வீர்யங்கள் குணங்கள் குன்றுமல் மாறுமல், ஆகும்படியான ஔஷத கல்பங்களை நிச்சயித்து, அநுஷ்டிக்கும் முறைகளையும் சேர்த்துக் கூறவேண்டியது அவசியம்.

**ஸ்சலீ (அமைப்பு)**

ஸம்ஸ்கிருத பாஷையாயினும் கூடிய வரையில் சுலோகமின்றி வசன சைலியில் பட்டிகைகள் போட்டு யோகங்கள் செய்முறைக் கிரமத்தை அநுஸரித்து எழுதவேண்டும். ஒரு திரவ்யத்திற்குப் பல பர்யாய நாமங்கள் இருப்பினும் பிரதானமான ஒரே பதத்தையே எங்கும் உபயோகிக்க வேண்டும். சுலோக சைலியில் இது முற்றிலும் ஸாதாரணமாய் ஸாத்தியமாகாது. மான பரிபாஷையில் சிறிதும் கிலேசத்திற்கு இடமின்றி திரவத்திற்கு த்விகுணம், பலக்கணக்கில் சொல்லியிருந்தால் த்விகுணமில்லை, என்று கலக்கமின்றி பிரதி யோகத்திலும், பிரதி திரவியத்திற்கும் நிஷ்கிருஷ்டமான மானம் அங்கங்கு எழுதிவிட வேண்டும். இன்று உலகில் வழக்கத்தில் இருக்கும் நவீன கணித விஞ்ஞான முறைப்படி அங்கீகாரம் செய்து, பிரஸித்தமான மான பரிபாஷையை முடிந்தவரை ஆயுர்வேதப்படுத்தி உபயோகித்தலே நல்லது. அப்படியே பழைய மானங்களை வைத்துக் கொள்ளவேண்டியது அவசியமில்லை.

யோக புஸ்தகத்தில் இருக்கும் ஸகல திரவியங்களுக்கும் ஸம்ஸ்கிருத அகராதி வகுத்து, இந்தியாவின் எல்லாப் பிராந்திய பாஷைகளின் பெயர்கள். அகப்படும் இடம், Latin names உள்பட எல்லாம் அவசியமாய் எழுதப்பட வேண்டும். இத்தொகுதியில் திரவியங்களுடைய பிராந்திய பாஷா நாமங்களையும் (தலைப்பில் பாஷைகளின் பெயரைக் குறிப்பிட்டு விட்டு) பிர

தேச லிபியில் அச்சிடாமல், நாகரீ லிபியில் அச்சிடுவது தான் எல்லாப் பிராந்தியர்கட்கும் சிறந்த உபகாரமாகும்.

**சுருக்கம்.**

ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதி நாகரலிபியில் அச்சிடும் புதிய ஆயுர்வேத யோக புஸ்தகத்தைப் படித்துப் புரிந்து கொள்ள, ஸ்வல்ப ஸம்ஸ்கிருத ஞானமே போதும். அதிக ஸம்ஸ்கிருத பாண்டித்யம் தேவையே இல்லை. இந்நூல் முதன் முதலில் இங்கிலீஷ் பாஷையில் அல்லது அந்த லிபியில் எழுதி அச்சிட்டால் ஆயுர்வேதத்திற்கும் அகில பாரதத்திற்கும் அவமானம். வேண்டுமானால் பிறகு, அல்ப ஸம்ஸ்கிருதமும், நாகர லிபியும் கூட படிக்கத் தெரியாதவரும் ஆயுர்வேதம் அப்யஸித்து உலகத்தை உத்தாரணம் செய்வதற்கு உபகாரமாக, இங்கிலீஷ் பாஷையில் மொழி பெயர்த்துக் கொள்ளலாம், பிரதி ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட முதல் ஆயுர்வேத மருந்து யோக புஸ்தகம் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதி, நாகரீலிபியில் அச்சிட்டு, திரவியங்களுக்கு பிராந்திய பாஷைகளின் பர்யாயங்களையும் தனிவாகக் கோர்த்து அமைத்து விட்டால், அகில பாரத தேசத்திலும் ஆயுர்வேத வைத்திய முறை சீக்கிரத்தில் ஓரே மாதிரியாக வழக்கத்தில் வந்துவிடும்.

---


## க்ஷய நோயில் ஆயுர்வேதத்தின் வெற்றி.

★

பம்பாய் அரசாங்கத்தின் ஆராய்ச்சி ஸ்தாபனத்திலுள்ள டாக்டர். கிருஷ்ணமூர்த்தியின் ஸமீபகால ஆராய்ச்சியால் T. B. என்னும் க்ஷய நோயைக் கண்டிப்பதில் மிகவும் பயனுள்ளதாக 'ருதந்தீ' நிச்சயிக்கப் பட்டது. இதிலிருந்து எல்லா வைத்யர்களும் ருதந்தீயை உபயோகித்து வருவதில் பலன் அதிகரித்து வருகிறது.

**ருதந்தீ காம்பௌண்ட்**

*ருதந்தீ, அப்ரகம், சிருங்கம், வம்சலோசனம் முதலிய க்ஷய நோயைப் போக்கவல்ல மருந்துகள் சேர்ந்தது.*

**50 மாத்திரைகள் ரூ. 5. 100 மாத்திரைகள் ரூ. 9.**

Sole Agents : **ARYN AGENCIES,**

**44. Maharani Road, Indore City. (M. P.)**

தென்னிந்தியாவில் ஏஜண்டுகள் தேவை.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருதலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0  1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் திறவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

## K. L. TALWAR & BROS.

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்ப்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

## BHANOT BROTHERS.

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

# ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

## கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments.

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752), Cannanore (Phone 92), Palghat (Phone 195), Kozhikode (Phone 984), Ernakulam (Phone 494), Ponani (Phone 41),
Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்ட யோகஸங்கிரஹம். யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்த துஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, மானேஜிங் டைரெக்டர்

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி.

கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வநாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது.

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா
பிரதான வைத்யர்.



- FEB

ஸ்ரீ தன்வந்தரயே நம:

आविर्बभूव कलशं दधदर्णवाद्यः
पीयूषपूर्णममरत्वकृते सुराणाम् ।
रुग्जालजीर्णजनताजनितप्रशंसो
धन्वन्तरिः स भगवान् भविकाय भूयात् ॥

ஆவிர்பபூவ கலசம் தததர்ணவாத் ய:
பீயூஷபூர்ணமமரத்வக்ருதே ஸுராணம்,
ருக்ஜால ஜீர்ண ஜனதாஜனிதப்ரஶம்ஸ:
தன்வந்தரி: ஸ பகவாங் பவிகாய பூயாத்.

नमामि धन्वन्तरिमादिदेवं सुरासुरैर्वन्दितपादपद्मम् ।
लोके जरारुग्भयमृत्युनाशं दातारमीशं विविधौषधीनाम् ॥

நமாமி தன்வந்தரிமாதிதேவம்
ஸுராஸுரைர்வந்தித பாதபத்மம்,
லோகே ஜராருக்பய ம்ருத்யுநாசம்
தாதாரமீசம் விவிதௌஷதீநாம்.

## श्रीधन्वन्तरि अष्टोत्तर शतनामावलिः ।

## ஸ்ரீ தந்வந்தரி அஷ்டோத்தர சதநாமாவளி:

| | |
|---|---|
| ओं धन्वन्तरये नमः | ஓம் தந்வந்தரயே நம: |
| आदिदेवाय | ஆதிதேவாய |
| सुरासुरवन्दिताय | ஸுராஸுரவந்திதாய |
| वयःस्थापकाय | வய:ஸ்தாபகாய |
| सर्वामयध्वंसकाय | ஸர்வாமயத்வம்ஸகாய |
| भयापहाय | பயாபஹாய |
| मृत्युञ्जयाय | ம்ருத்யுஞ்ஜயாய |
| विविधौषधदात्रे | விவிதௌஷததாத்ரே |

| | | |
|---|---|---|
| ओं सर्वेश्वराय नमः | ஓம் ஸர்வேச்வராய நம: | |
| शङ्खचक्रधराय | சங்சக்ரதராய | (10) |
| अमृतकलशहस्ताय | அம்ருதகலசஹஸ்தாய | |
| शल्यतन्त्रविशारदाय | சல்ய தந்த்ர விசாரதாய | |
| दिव्यौषधधराय | திவ்யௌஷத தராய | |
| करुणामृतसागराय | கருணாம்ருதஸாகராய | |
| सुखकराय | ஸுக கராய | |
| शस्त्रक्रियाकुशलाय | சஸ்த்ரக்ரியாகுசலாய | |
| धीराय | தீராய | |
| निरीहाय | நிரீஹாய | |
| शुभदाय | சுபதாய | |
| महादयालवे | மஹாதயாலவே | (20) |
| सांगागद् वेद् वेद्याय | ஸாங்காகதவேதவேத்யாய | |
| भिषक्तमाय | பிஷக்தமாய | |
| प्राणदाय | ப்ராணதாய | |
| विद्वद्वराय | வித்வத்வராய | |
| आर्त त्राण परायणाय | ஆர்த த்ராண பராயணாய | |
| आयुर्वेदप्रचारकाय | ஆயுர்வேதப்ரசாரகாய | |
| अष्टाङ्गयोगनिपुणाय | அஷ்டாங்க யோகநிபுணாய | |
| जगदुद्धारकाय | ஜகதுத்தாரகாய | |
| अनुत्तमाय | அநுத்தமாய | |
| सर्वज्ञाय | ஸர்வஜ்ஞாய | (30) |
| विष्णवे | விஷ்ணவே | |
| समानाधिकवर्जिताय | ஸமாநாதிகவர்ஜிதாய | |
| सर्वप्राणिसुहृदे | ஸர்வப்ராணிஸுஹ்ருதே | |
| सर्वमङ्गलकराय | ஸர்வமங்களகராய | |
| सर्वार्थदात्रे | ஸர்வார்த்ததாத்ரே | |
| महामेधाविने | மஹாமேதாவிநே | |
| अमृतपाय | அம்ருதபாய | |
| सत्यसन्धाय | ஸத்யஸந்தாய | |
| आश्रित जन वत्सलाय | ஆச்ரிதஜனவத்ஸலாய | |
| अमृताशाय | அம்ருதாசாய | (40) |
| अमृतवपुषे | அம்ருதவபுஷே | |
| प्राणनिलयाय | ப்ராணநிலயாய | |

| | | |
|---|---|---|
| ओं पुण्डरीकाक्षाय नमः | ஓம் புண்டரீகாக்ஷாய நம: | |
| लोकाध्यक्षाय | லோகாத்யக்ஷாய | |
| प्राणजीवनाय | ப்ராணஜீவநாய | |
| जन्ममृत्युजरातिगाय | ஜந்மம்ருத்யுஜராதிகாய | |
| सद्गतिप्रदाय | ஸத்கதிப்ரதாய | |
| महोत्साहाय | மஹோத்ஸாஹாய | |
| समस्तभक्तसुखदात्रे | ஸமஸ்தபக்தஸுகதாத்ரே | |
| सहिष्णवे | ஸஹிஷ்ணவே | (50) |
| सिद्धाय | ஸித்தாய | |
| समात्मने | ஸமாத்மநே | |
| वैद्यरत्नाय | வைத்யரத்நாய | |
| अमृत्यवे | அம்ருத்யவே | |
| महा गुरवे | மஹா குரவே | |
| अमृतांशोद्भवाय | அம்ருதாம்சோத்பவாய | |
| क्षेमकृते | க்ஷேமக்ருதே | |
| वंशवर्धनाय | வம்சவர்த்தநாய | |
| वीतभयाय | வீதபயாய | |
| प्राणप्रदे | ப்ராணப்ரதே | (60) |
| क्षीराब्धिजन्मने | க்ஷீராப்திஜந்மநே | |
| चन्द्र सहोदराय | சந்த்ர ஸஹோதராய | |
| सर्वलोकैकवन्दिताय | ஸர்வலோகைகவந்திதாய | |
| परब्रह्मणे | பரப்ரஹ்மணே | |
| यज्ञभोक्त्रे | யஜ்ஞபோக்த்ரே | |
| पुण्यश्लोकाय | புண்யச்லோகாய | |
| पूज्यपादाय | பூஜ்யபாதாய | |
| सनातनतमाय | ஸநாதநதமாய | |
| स्वस्तिदाय | ஸ்வஸ்திதாய | |
| दीर्घायुष्कारकाय | தீர்காயுஷ்காரகாய | (70) |
| पुराणपुरुषोत्तमाय | புராணபுருஷோத்தமாய | |
| अमरप्रभवे | அமரப்ரபவே | |
| अमृताय | அம்ருதாய | |
| नारायणाय | நாராயணாய | |
| औषधाय | ஔஷதாய | |
| सर्वानुकूलाय | ஸர்வாநுகூலாய | |

| | | |
|---|---|---|
| ओं शोकनाशनाय नमः | ஓம் சோகநாசனுய நம: | |
| लोकबन्धवे | லோகபந்தவே | |
| नानारोगार्तिभञ्जनाय | நாளுரோகார்த்திபஞ்ஜநாய | |
| प्रजानां जीवहेतवे | ப்ரஜாநாம் ஜீவஹேதவே | |
| प्रजारक्षण दीक्षिताय | ப்ரஜாரக்ஷண தீக்ஷிதாய | |
| शुक्लवाससे | சுக்லவாஸஸே | |
| पुरुषार्थप्रदाय | புருஷார்த்தப்ரதாய | |
| प्रशान्तात्मने | ப்ரசாந்தாத்மநே | |
| भक्तसर्वार्थसाधकाय | பக்தஸர்வார்த்தஸாதகாய | |
| भोगभाग्यप्रदात्रे | போகபாக்யப்ரதாத்ரே | |
| महैश्वर्यदायकाय | மஹைச்வர்யதாயகாய | |
| लोकशल्यहृते | லோகசல்யஹ்ருதே | |
| चतुर्भुजाय | சதுர்புஜாய | |
| नवरत्नविभूषिताय | நவரத்நவிபூஷிதாய | (90) |
| निस्सीम महिम्ने | நிஸ்ஸீம மஹிம்நே | |
| कोविदानां पतये | கோவிதாளும் பதயே | |
| दिवोदासाय | திவோதாஸாய | |
| प्राणाचार्याय | ப்ராளுசார்யாய | |
| भिषङ्मणये | பிஷங்மணயே | |
| त्रैलोक्यनाथाय | த்ரைலோக்யநாதாய | |
| भक्तिगम्याय | பக்திகம்யாய | |
| तेजोनिधये | தேஜோநிதயே | |
| कालकालाय | காலகாலாய | |
| परमार्थगुरवे | பரமார்த்தகுரவே | (100) |
| जगदानन्दकारकाय | ஜகதாநந்தகாரகாய | |
| आदिवैद्याय | ஆதிவைத்யாய | |
| श्रीरङ्गनिलयाय | ஸ்ரீரங்கநிலயாய | |
| सर्वजन सेविताय | ஸர்வஜன ஸேவிதாய | |
| लक्ष्मीपतये | லக்ஷ்மீபதயே | |
| सर्वलोकरक्षकाय | ஸர்வலோகரக்ஷகாய | |
| कावेरीस्नानसंतुष्टाय | காவேரீஸ்நானஸந்துஷ்டாய | |
| सर्वाभीष्टप्रदाय नमः | ஸர்வாபீஷ்டப்ரதாய நம: | |

ஸ்ரீ:

# திருச்சி ஆயுர்வேத ஸபை ஆண்டுவிழா.

திருச்சி ஆயுர்வேத ஸபையின் 27-வது ஆண்டு நிறைவு விழா சென்ற 29—1—1961 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புதுக்கோட்டை டவுன் பாங்கு கட்டடத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. வந்திருந்த வைத்தியப் பிரதிநிதிகளுக்கு ஆகார இடவசதிகளை ஸபைத் தலைவர் ஸ்ரீ P. விச்வனாதசர்மா அவர்கள் தமது லக்ஷ்மி டிஸ்பென்ஸரியில் சிறந்த முறையில் அமைத்திருந்தார். விழாவிற்கு சென்னை இந்திய வைத்தியக் கல்லூரி முன்னாள் ஆயுர்வேதப் பேராசிரியரும், சென்னை இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட்டின் நிர்வாஹக் குழுத் தலைவருமான வைத்ய ஸ்ரீ V. நாராயணஸ்வாமி அய்யர், H. P. I. M. அவர்கள் தலைமை வஹித்தார்கள். அவ்வமயம் மதுரை ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ C. K. மேனன் M. A. அவர்கள் கேரளத்தின் விசேஷ சிகித்ஸா க்ரமங்கள் என்பது பற்றி ஆங்கிலத்திலும், திருச்சி ஆயுர்வேதாசார்ய வைத்ய விசாரத ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ அவர்கள் மூத்திர நோய்களில் ஆல்ப்யுமன் என்பது பற்றி ஸம்ஸ்கிருதத்திலும் உபன்யஸித்தார்கள். (இவ்விரு வுரைகளின் தமிழாக்கச் சுருக்கம் பிரிதொரு பக்கங்களில் வெளியாகி யுள்ளது.)

தலைவர் ஸ்ரீ V. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் தமது தலைமையுரையில் "நவீன வைத்ய முறை நிபுணர்கள் அவ்வப்போது ஆராய்ச்சி அரங்குகளில் கூடி விஷயங்களை ஆராய்வதன் மூலம் வைத்ய அறிவை வளர்த்துக்கொள்வதைப் பார்க்கிறோம். அவ்வாறு ஆயுர்வேத வைத்யர்கள் ஆராய்ச்சி அரங்குகளை நடத்த இயலாதிருக்கும் போது இச்சபை இப்பணியைக் கடந்த 27 ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருவதை நாம் மனமாரப் பாராட்ட வேண்டும்" என்று கூறினார். இடைவேளைக்கு பின்னர் நடந்த பொதுக் கூட்டத்தை புதுக்கோட்டை அட்வோகேட் ஸ்ரீ G. K. ராமசந்திர அய்யர் அவர்கள் ஆரம்பித்து வைத்து அறிவுரை நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவர் அவர்கள் ஆயுர்வேதமும் நோய்தடுப்பு முறையும் என்பது பற்றி ஓர் அறிவுரை நிகழ்த்தினார்கள்.

இவ்வாண்டுவிழாவில் நிறைவேறிய தீர்மானங்கள் பின் வருமாறு :—

1. ஆயுர்வேதத்தை அதன் கல்வி தொழில் முதலிய பல் வேறு துறைகளில் வளர்க்க முழுப் பொறுப்புள்ள அகிலபாரத ஆயுர்வேத மத்ய போர்டு ஸ்தாபனம் ஒன்றை நிறுவ வேண்டு மென்று மத்ய ஆராய்ச்சிக் குழு சிபார்சு செய்துள்ளதை ஏற்றுக் காலதாமதமின்றி உடன் அமூலாக்குமாறு மத்யசர்க்காரை இந்த சபை கேட்டுக் கொள்ளுகிறது.

2. ஸ்ரீ P. M. மேஹ்தா தலைமையில் கூடிய கமிட்டி ஆயுர் வேதக் கல்லூரி நிறுவன விஷயமாகக் கொடுத்துள்ள யாதா ஸ்தை ஏற்று உடன் செயலாற்றுமாறு சென்னை சர்க்காரை இந்த சபை கோருகிறது.

3. புதிதாக நிறுவவிருக்கும் ஆயுர்வேதக் கல்லூரியைத் தகுந்த சூழ்நிலையிலுள்ள திருச்சியிலேயே நிறுவுமாறு சென்னை சர்க்காரை இந்த ஸபை கோருகிறது.

4. நிகிலபாரத ஆயுர்வேத ஸம்மேள்னத்தின் 40-வது மகாநாட்டை டெல்லியில் நடத்துவதாக நிச்சயித்துள்ளபடி, காலதாமதமின்றி அம்மகாநாட்டை நடத்துமாறு அகிலபாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தைக் கோருகிறது.

பின்னர் காரியதர்சியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. விழாப் பொறுப்பைத் திறம்பட ஏற்று நடத்திய புதுக்கோட்டை வைத்ய ஸ்ரீ P. விச்வநாதசர்மா அவர் களுக்கு நமது நன்றி உரித்தாகுக.

---

## ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலே, ஸ்ரீரங்கம்.

ஜனவரி மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 666 | 1718 |
| பெண்கள் | 656 | |
| சிறுவர் | 396 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை.

# கேரளத்தின் விசேஷ சிகித்ஸை முறைகள்.

[ஆயுர்வேத சிரோமணி C. K. மேனன், M. A.]

[திருச்சி ஆயுர்வேத ஸபை ஆண்டுவிழாவில் ஸ்ரீ மேனன் அவர்கள் நிகழ்த்திய ஆங்கில சொற்பொழிவின் சுருக்கமான தமிழாக்கத்தை இங்கு வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். —ஆசிரியர்.]

ஆயுர்வேதம் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்துவதில் மற்ற எல்லா முறைகளையும் விடச் சிறந்தது. அதிலும் கேரள வைத்யர்கள் தனிப்பட்ட சிகித்ஸை முறையை இதற்கென வகுத்துள்ளார்கள். தைலங்களும் மற்ற விசேஷ மருந்துகளும் தனிப்பட்டு இதற்கெனப் பயன்படுகின்றன. இவைகளுக்கான ஆதாரம் சாஸ்திர நூல்களில் நன்கு காணப்பட்டாலும் இவ்வழியைக் கையாண்டு வகைப் படுத்தியது கேரளமே.

இவை 3 வகைப்படும் தாரை, பிழிச்சல், நவரக்கிழி என. இம் மூன்று முறைகள் மற்ற முறைகளால் கைவிடப்பட்ட கொடும் நோய்களில் ஆச்சரியமாகக் குணப்படுத்தியுள்ளன.

இம்முறை கேரளத்தில் மாத்திரம் ஏன் கையாளப் படுகின்றது என்பதன் காரணத்தை நிர்ணயிப்பது கடினமே. கேரள சீதோஷ்ண நிலை இதற்கு ஏற்றதாயிருப்பது ஒரு காரணமாகலாம். தினந்தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது என்ற பொதுஜனப் பழக்கம் மற்றொரு காரணமாகலாம். கேரளத்தில் அதிக அளவில் வாத நோய்கள் அதிலும் ஆமவாதம் ரக்தவாதம் போன்றவை அதிகமாகக் காண்பதனால் அதற்கேற்ற சிகித்ஸை வகுப்பதில் உள்ள தேவையின் பூர்த்தி எனும் அவசியமே இதன் காரணமாகவும் அமைந்திருக்கலாம். அதற்காக கேரளத்தில் தான் இந்த சிகித்ஸை கையாளப்பட வேண்டுமென்று கூறுவது தவறே. இந்த முறை எந்த தேசத்திலும் தகுந்த வைத்யனும் உதவியாளர்களும் தேவையான உபகரணங்களும் கிடைக்கும் பக்ஷத்தில் கையாளக் கூடியதே. இது செப்பிடு வித்தையோ மாந்த்ரிகமோ அல்ல. ஒரு நல்ல சாஸ்திரீய சிகித்ஸை முறையே.

இவ்வித சிகித்ஸை முறைகளை நல்ல தெய்வ சிந்தனையுடன் தெய்வ வணக்கத்துடன் முக்யமாக தீபமேற்றி பூஜை செய்து பின்னர் ஆரம்பிப்பது வழக்கம். தமிழ்நாட்டிற்கும் இம்முறை புதிதல்ல.

இனி இம் முறைகளைப்பற்றி சுருக்கமாக ஆராய்வோம்.

1. **தாரா:** தாரை என்பது ஒரு திரவத்தைத் தொடர்பு விடாது ஒரே சீரான தாரையாக நோயாளியின் உடலில் நோயுள்ளபாகத்தில் விடுவது எனப் பொருள்படும். தாரை அதன் செய்முறைக்கேற்ப மூன்று வகைப்படும்.

1. மூர்த்தன்ய (சிரோ) தாரா- தலையில் மாத்திரம் தாரை செய்வது.
2. ஸர்வாங்கீண தாரா- உடல்முழுவதும் தாரை செய்வது.
3. பிராதேசிக தாரா- ஒரு தனி உறுப்பிற்கு மாத்திரம் தாரை செய்வது.

இப்போது சிரோ தாரையை மட்டும் இங்கு குறிப்பிடுவோம். இந்த தாரைக்கான திரவமாக தைலங்கள், மோர், பசுவின் பால், முலைப்பால், இளநீர், குளிர்ந்த நீர் இவைகளில் ஒன்றை எடுத்துக் கொள்வது வழக்கம். மோரும் சம அளவு நெல்லிமுள்ளி கஷாயமும் சேர்ந்து செய்யப்படும் தக்ர தாரை அதிகமாகக் கையாளப் படுகின்றது. தக்ர தாரைக்கான மோர் தயாரிக்கும் போது கோரைக்கிழங்கு முதலியவைகளைப் போட்டு ஜலம் வற்றச் சுண்டக் காய்ச்சிய பசுவின் பாலை உறை குத்தி மோராக்கிக் கொள்வது வழக்கம். மோரும் நெல்லி முள்ளி கஷாயமும் வகைக்கு 1½ படி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தாரைக்கு முக்யத் தேவை தாரைச் சட்டியும் தாரைப் பாத்தியும். தாரைப்பாத்தியையே மற்ற சிகித்ஸைகளுக்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மாம்பலகை அல்லது பலாப் பலகையால் இப்பாத்தி தயாராகும். எட்டிப்பலகை மிக உயர்ந்தது. தாரைப்பாத்தி அகலத்தில் 22—32 அங்குலங்களும் நீளத்தில் 7—8 அடியும் இருக்கும். தலைப்பகுதியில் தலை பதியுமிடத்தில் ஒரு பள்ளமமைத்து அதன் நடுவே துவாரம் செய்து தாரைத் திரவம் உடற் பகுதியில் வந்து சேராமல் அந்தத் துவாரம் வழியே வெளியேறும் வகையில் அமைக்கவேண்டும். தாரைச் சட்டி 4 படி திரவம் பிடிக்குமளவில் அடி கனத்து விளிம்புகள்

கெட்டியாக இருக்கவேண்டும். சட்டியின் நடுவே ஒரு சுண்டு விரல் பதியுமளவு துவார மிட்டு அதில் நான்கு அங்குல நீள முள்ள நூல் திரியை மேல் முடிச்சிட்டு துவாரம் வழியே கீழ் தொங்கும்படி வைக்கவேண்டும். மேல் ஒரு தென்னங் கொட்டாங்கச்சியை ஓரத்தில் ரம்பம் போல் சிறிய பற்கள் அமைத்துக் கவிழ்த்து மூடுவது திரவம் வேகமாக வெளியேறாமல் தடுக்க உதவும்.

மற்றொரு முக்ய ஸாதனம் நல்ல உதவியாளர்கள். தாரை நல்ல பலனை யளிப்பது இவர்களது கைத்திறனையே ஒட்டியுள்ளது. பொதுப்படையான ஆயுர்வேத அறிவு, கருணை, சேர்ந்து ஒத்துழைப்பது, பொறுமை, அன்பு, நோயாளியின் மன நிலையை அறிந்து அவனுக்கு உற்சாகமளிப்பது, பொறுப்புணர்ச்சி இவை உள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

தாரை செய்யும்போது வெளியேறும் திரவத்தை ஏந்த சிறிய பாத்தி ஒன்றும், ஒரு சிறிய பாத்திரமும், தாரை ஆனதும் ஈரத்தைப் போக்கக் காய்ந்த துண்டும் தேவை.

தாரை திரவத்தை ஒரே சீரான தாரையாக நோயாளியின் நெற்றியில் திரியின் நுனி வழியே விழச் செய்யவேண்டும். நெற்றிக்கு மேல் 2 அங்குல உயரத்தில் திரியின் நுனி இருக்குமாறு மேல் தாரை சட்டியைத் தொங்கவிட வேண்டும். ஒரே இடத்தில் திரவம் விழுவதால் தலைவலி ஏற்படுமாதலால் திரவத்தை நெற்றியின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரை விழுமாறு சட்டியை ஆட்டிக் கொண்டே யிருக்கவேண்டும்.

தாரை முதலியவை காலைநேரத்திலேயே செய்யப்படுகின்றன. காலையில் மல மூத்திராதி விஸர்ஜனம் முடிந்த பின்னர் பல் தேய்த்துத் தாரை செய்துகொள்ள வேண்டும். நெற்றியைச் சுற்றி காது-புருவ மட்டத்தில் ஒரு துணியை இறுக்கக் கட்டிக் கொள்ளவேண்டும். இது திரவத்தை கண்களில் வந்து விழாமல் செய்யும். பாத்தியில் நோயாளி உட்கார்ந்ததும் தலைக்கும் உடலுக்கும் உசிதமான தைலத்தைத் தடவித் தாரையை ஆரம்பிக்க வேண்டும்.

வெளியேறும் திரவத்தை ஒரு சிறிய பாத்தியில் சேர்ந்துள்ளதை எடுத்து மேல் தாரை சட்டியில் திரவம் குறையக் குறையச் சேர்த்துக் கொள்ளலாம்.

முதல் நாள் 60 நிமிஷம், இரண்டாவது நாள் 70 நிமிஷங்கள், மூன்ருவது நாள் 80 நிமிஷங்கள், நான்காவது முதல் பதிஞேராவது நாள் வரை 90 நிமிஷங்கள், பன்னிரண்டாவது நாள் 80 நிமிஷங்கள், 13-வது நாள் 70 நிமிஷங்கள், 14-வது நாள் 60 நிமிஷங்கள் என்ற கணக்கில் 14 நாட்கள் தொடர்ந்து இந்த சிகித்ஸை நடைபெற வேண்டும்.

தாரை முடிந்ததும் எல்லாத் திரவாம்சங்களையும் துடைத்து விட்டு தைலம் தடவி நோயாளியைக் குளிப்பாட்ட வேண்டும். இதனுல் உன்மாதம், தூக்கமின்மை, மூக்கிலும் தொண்டையிலும் வரட்சி, லிங்கநாசமெனும் கண்ணேய், கடும் தலைவலி, மற்றுமுள்ள தலை நோய்கள் இவை நீங்கும்.

**பிழிச்சல்:** வாத வியாதிகளில் ஸ்நேஹனம் ஸ்வேதனம் என்ற இரு சிகித்ஸைகள் உண்டு. ஸ்நேஹனம் என்பது நெய் அல்லது தைலத்தை உட்கொள்ளுவதோ மேலுக்குத் தேய்ப்பதோ ஆகும். ஸ்வேதனம் என்பது உடலை வியர்க்க வைப்பது. ஸ்வேதன முறையில் மிகச் சிறந்தது பிழிச்சல். இது தைலத்தைக் கொண்டு ஸர்வாங்கீண தாரை செய்வதை ஒத்திருக்கும். ஆனுல் இதில் உடலைத் தேய்த்து விடுதல் அதிகம் என்பதே இதற்கும் தாரைக்குமுள்ள வேறுபாடு.

நோயாளியைப் பாத்தியில் உட்கார வைத்து உசிதமான தைலத்தைத் தலைக்கும் உடலுக்கும் தடவி நெற்றியில் திரியைக் கட்டிவிட வேண்டும். பிழிச்சல் கழுத்துக்குக் கீழே உள்ள பாகங்களில் செய்யப்பட வேண்டும். இரு உதவியாளர்கள், ஒருவர் கழுத்திலிருந்து இடுப்பு வரையிலுமாகவும் மற்றவர் இடுப்பிற்குக் கீழேயும் ஒரே சீராக எண்ணெயைப் பிழிந்து தேய்ப்பார்கள். நோயாளிக்குப் பக்கத்திலுள்ள குமுட்டி அடுப்பில் பிழிச்சலுக்கான தைலம் சூடாக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

உதவியாளர்கள் நோயாளி தாங்குமளவிற்குச் சூடாக்கியுள்ள தைலத்தை ஒரு துணியில் தோய்த்து இடது கையில் வைத்துப் பிழிந்து கொண்டே வலக்கையால் இதமாக தேய்த்து விடுவார்கள். ஒரே சீராக ஒரே வேகத்தில் உடலின் எல்லாப் பகுதிகளிலும் தைலம் பிழிபடுவதும் தேய்ப்பதும் நடந்து கொண்டிருக்க வேண்டும். முதலில் சிறிது நேரம் நோயாளியை உட்கார வைத்தும் பிறகு படுக்க வைத்தும் இம்முறை செய்யப்படும். சில நோயாளிகளுக்கு தாரையையும் சேர்ந்தாற் போலவே செய்வது வழக்கம்.

பக்ஷவாதம், அபதந்திரகம் மற்றும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள், பொதுவான பலவீனம், எலும்பு முறிவு, மூட்டுகளில் பிடிப்பு, வலி முதலியவைகளில் நல்லது. சரீரம் திடம்பெற நரம்புகள் வலுப்பெற இது மிகவும் நல்லது.

**நவரக்கிழி:** ஸ்வேதன சிகித்ஸை முறைகளில் நவரக்கிழியும் முக்யமானதே. முக்கிய சாதனம் நவரை யரிசி. இதற்கான நவரக்கிழிகள் செய்யும் முறை பின் வருமாறு—60 தோலா சிற்ருமுட்டி வேரை இடித்து 12 படி ஜலத்திலிட்டுக் கஷாயமிட்டு 3 படி மீதமாக்கி வடிகட்டிக் கொள்ளவும். இந்தக் கஷாயத்தில் 1½ படி எடுத்து சம அளவு பசுவின் பால் சேர்த்து ½ படி நவரை அரிசி போட்டு வேகவைத்துச் சாதமானதும் அதை 8 சதுரமான துண்டுகளிலிட்டு 8 கிழிகளாகப் பந்து உருவில் கட்டி நான்கு நுனிப் பகுதிகளையும் கிழியைக் கைகளால் பிடித்துக் கொள்வதற் கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். மீதியுள்ள சிற்ருமுட்டி கஷாயத்தைச் சம அளவு பால் சேர்த்து அடுப்பிலேற்றிச் சூடாக்கிக் கொள்ளவும். இந்த விதத்தில் ஸாதனங்கள் தயாரானதும் நோயாளியைப் பாத்தியில் உட்கார வைத்துத் தலைக்கும் உடலுக்கும் உசிதமான தைலங்கள் தடவி நெற்றிக்குத் திரி கட்டிக் கொள்ளவும். இதுவும் கழுத்துக்குக் கீழேதான் செய்யப்படுகின்றது, இதற்கு நான்கு உதவியாளர்கள் தேவை. 8 கிழிகளில் 4 கிழிகள் உபயோகத்திலிருக்கும். பாக்கி பால் கஷாயத்தில் ஊற்றிச் சூடாக்கப் பட்டுக் கொண்டிருக்கும். உபயோகித்துக் கொண்டிருக்கும் கிழியில் சூடு குறைந்ததும் அதைக் கஷாயத்திலிட்டு சூடாக்கியுள்ள கிழியை உதவியாளர் தன் இடது உள்ளங்கையில் வைத்து அதன் சூட்டைப் பொறுக்குமா என்று கவனித்த பின்னர் ஒரே சீராகத் தேய்த்துவிட வேண்டும். கழுத்திலிருந்து ஆரம்பித்து இந்த ஸ்வேதம் கால் பகுதி வரை கீழ் நோக்கி இந்த தேய்ப்பு நடைபெறும். கிழியின் தேய்ப்பும் சூடும் ஒரே சீராக இருப்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். கஷாயம் முழுவதும் கிழிகளில் சேர, மீதியுள்ள கிழியை உடலில் பூசி, பூச்சை அகற்றி தைலம் தடவி குளிப்பாட்டலாம்.

நவரைக்குப் பதில் சாமையும் அல்லது உளுந்து சில நோய்களில் உபயோகப்படுத்தப் படும். மிகவும் இளைத்தவர்களுக்கு கஷாயத்தில் சிற்ருமுட்டியோடு மாம்ஸமும் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

ஸ்வேதன சிகித்ஸையின் எல்லா நன்மைகளும் இதனுல் ஏற்படும். உடலில் மென்மை, திமிர்த்துள்ள பூட்டுகள் லேசா

தல், உடல் நிறம், ஒளி மிளிர்தல், ஜீர்ண சக்தி இவை ஏற்படும். வாத நோய்கள், நாட்பட்ட ஆமவாதம் ரக்தவாதம், பூட்டு களில் வலி, கைகால்கள் சூம்பிப் போதல், ரக்தக் கெடுதலால் ஏற்படும் தோல் நோய்கள், ரத்தக்கொதிப்பு இவைகளில் நல்ல குணம் தரும்.

**அன்னலேபனம்:** நவரக்கிழி போன்றது. ஆனால், அதைவிட எளிதானது இந்த அன்ன லேபனம். இதிலும் நவரை அரிசியே உபயோகமாகும். தோல் நோய்களிலும் ரத்தக் கொதிப்பிலும் இது மிகவும் பயன்படும். அரிசியைப் பசுவின்பால் சேர்த்த சிற்றுமுட்டி கஷாயத்தில் முன்போல அமைத்துச் சூடாக இருக் கும் போதே அதை உடலில் தேய்த்து விடுவது அன்னலேபன மாகும். சிகித்ஸை முடிந்ததும் பூச்சை அகற்ற உளுந்து மா அல்லது ப்யற்றுமா சேர்த்து உடலைத் தேய்த்து குளிப்பாட்ட வும்.

ஸ்நானத்திற்கான ஜலத்தை நன்கு கொதிக்க வைத்துத் தேவையான சூட்டிற்கு ஆற வைக்க வேண்டும். தலைக்குள்ள வென்னீரில் நெல்லிக்காயும், உடலுக்குள்ள வென்னீரில் சிற்று மணக்கிலையும் மற்ற வாதஹர பத்திரங்களையும் போட்டு வென் னீர் தயாரிக்க வேண்டும்.

## பொதுவான நியமங்கள்.

இந்த சிகித்ஸைக் கிரமங்கள் சக்தி மிக்கதாக இருப்பதற் கேற்ப நல்லதை விளைவிப்பதை போல கெடுதலையும் கொடுக்க லாம். நடைமுறை உணவு நியமங்களை மீறுவதும் பெரும் கெடு தியை அளிக்கும். நல்ல தேர்ச்சி பெறுமல் வைத்யன் இதில் ஈடுபடக்கூடாது. தேர்ச்சியற்ற வைத்யனிடம் சிகித்ஸை பெறுவது குரங்கின் கையில் திவட்டி போல ஆபத்தை விளை விக்கலாம்.

நோயாளியும் கடும் பத்திய முறையிலிருக்க வேண்டும். ஸமசீதோஷ்ண நிலையுள்ள காலங்களில் செய்யப்படும் இந்த சிகித்ஸைகளில் காற்று வெய்யில் மழை புழுதி இவை உடலில் படாதவாறுத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதிக நடை, வாஹனமேறிச் செல்லுதல், பகல் தூக்கம், இர வில் தூங்காமை, பிரும்மசர்யம், பால் உணர்ச்சியைத் தூண்டும் புத்தகங்களைக் கூட படிக்காதிருத்தல், எளிதில் ஜீர்ணமாகக் கூடிய ஹிதமான ருசியான உணவு, மலகாயை நீக்குதல்,

பழைய புளி மாத்திரம் உபயோகித்தல், சூடான வெந்நீரையே அருந்துதல், மலமூத்திராதி வேகங்களை அடக்காதிருத்தல், உணர்ச்சி வசப்படாமை, இரைந்து பேசாதிருத்தல் இவைகளை சிகித்ஸை நடக்கும் 14 நாட்களுக்கு மட்டுமல்லாமல் தொடர்ந்து மேலும் பதினன்கு னாட்களிருத்தல் வேண்டும்.

இந்த பத்ய முறை கடுமையாக இருப்பினும், இதன் பலன் மிகவும் திருப்தியளிக்கும். மிகவும் நரம்புகளை உலுக்கும் சூழ் நிலையிலுள்ளவர்கள் கூட இதனுல் திடம் பெற்ற சூழ்நிலையில் திடமாக இருப்பார். மிகவும் களைப்படைந்த நரம்புகள் கூட இதனுல் வலுப்பெறும். இன்றைய உலகிற்கு மிகவும் தேவையான சிகித்ஸை முறை இது.

ஊக்கமும், ஆராய்ச்சியுணர்ச்சியும், சேவை மனப்பான்மையும் காரணமாக வாழையடி வாழையாக இந்த சிகித்ஸை முறையை நசிக்காது பாதுகாத்து வரும் கேரள வைத்ய பரம்பரைக்கு நமது நன்றி கலந்த வணக்கங்கள்.


## 'மார்தண்ட' ஆயுர்வேத இஞ்சக்ஷன்கள்

மார்த்தண்ட ஔஷத சாலையின் விசாலமான ஸமசீதோஷ்ண வசதி பெற்ற ஔஷத நிர்மாண சாலையில் உயர்தரமான தானுகவே இயங்கக் கூடிய பல மெஷின்கள் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளன.

இவ்வியந்திரங்கள் மூலமாக விஞ்ஞாநரீதியில் தகுதி பெற்றவர்களும் அநுபவமுள்ளவர்களுமான ஆராய்ச்சி நிபுணர்களின் மேற்பார்வையில் அரசாங்க அனுமதியுடன் சட்டதிட்டங்களுக்குட்பட்டு இஞ்சக்ஷன்கள் தயார் செய்யப்பெற்று சோதனைகளுக்குமுட்பட்டு வெளிவருகின்றன. மார்த்தண்டவின் மருந்துகள் சீக்கிரத்தில் குணமளிக்கின்றன. நாள் நிற்பவை, ஸ்திரமான லாபமளிப்பவை. இந்த இஞ்சக்ஷன் மருந்துகள் அகில இந்தியாவிலும் பதினயிரத்துக்கும் மேற்பட்ட ஏஜண்டுகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. ஆராய்ச்சிக்கு உதவும் விஷயங்களடங்கிய விற்பனை ஜாபிதாவை எழுதிப் பெறுங்கள்.

கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

**MARTAND PHARMACEUTICALS.**
**(Research Institute of Indian Medicines)**
**BARAUT S. S. Rly. (U P.)**

# மூத்திர ரோகத்தில் ஆல்ப்யூமின்

*[ ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. S. நடராஜ சாஸ்திரீ, திருச்சி. ]*

[திருச்சி ஆயுர்வேத ஸபையின் 27-வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் பேசிய ஸ்ரீ சாஸ்திரிகளின் ஸம்ஸ்கிருத உபன்யாஸத்தின் சுருக்கமான தமிழாக்கத்தை இங்கு தருவதில் மகிழ்ச்சியடைகிறோம். —ஆசிரியர்]

நாட்டிலுள்ள நவீன முறை அறிவுபெருத பாமரர்கள்கூட சிறுநீரில் உப்பு இருப்பதால் நோய் ஏற்படும் என உணர்கிறார்கள். சிறுநீரில் ஆல்ப்யுமின் (Albumin) இருப்பதையே உப்பு என குறிப்பிடுகிறார்கள். சிறுநீரில் சர்க்கரையைக் குறைக்க உணவில் சர்க்கரையைக் குறைப்பது போல, சிறுநீரில் ஆல்ப்யுமின் இருக்கும்போது உப்பைக் குறைக்குமாறு வைத்யர் கூறுவதால், சிறுநீரிலும் சர்க்கரையைப் போல உப்புமிருக்கும் என்ற தவறுதலான எண்ணமே நீரில் உப்பு என மக்கள் கூற இடமளித்துள்ளது. இன்று நாட்டில் ஆயுர்வேத வைத்தியர்கள் கூட ஆயுர்வேத முறைப்படியே சிகித்ஸையைக் கையாண்டாலும் நவீன வைத்ய முறைப்படியே சிறுநீரை சோதனை செய்கிறார்கள். பொதுவாகவே சிறுநீரில் ஆல்ப்யுமினும் சர்க்கரையும் தான் சோதனை செய்யப்படுகின்றன. மற்றவை விசேஷ நோய் நிலைகளில் தான் சோதிக்கப்படுகின்றன. இவ்விதம் பரவலாகக் காணப்பெறும் மூத்திர நோயான ஆல்ப்யுமின் சிறுநீரைப் பற்றி ஆயுர்வேத திருஷ்டியில் கண்டறிவது அவசியம். ஸுச்ருதர் மேதாயுஷ்காமீயத்தில் கூறியுள்ளபடி வேறு சிகித்ஸா சாஸ்திரங்களிலுள்ள விஷயங்களை அறிந்துகொள்வது ஆயுர்வேத சாஸ்திர வளர்ச்சிக்குப் பெருத்த உதவியளிக்கும் என்பதில் ஐயமில்லை.

சமீபத்தில் ஜாம், நகரில் உள்ள ஆயுர்வேத மேற்படிப்புக் குழுவின் மூலம் வெளியான மூத்ர பரீக்ஷை யெனும் நூலில் ஆல்ப்யுமினைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. ஆயுர்வேதத்தை அலோபதி திருஷ்டியில் ஆராய்ச்சி செய்வதால் ஏற்படும் தவறு இது. அலோபதியிலுள்ளவைகளை ஆயுர்வேத திருஷ்டியில் ஆராய்ந்திருந்தால் இந்தக்குறை ஏற்பட்டிருக்காது.

முதலில் ஆல்ப்யுமின் என்றால் என்ன? அது சிறுநீர் மூலம் வெளிப்படுவது எந்தக் கெடுதலைத் தெரிவிக்கிறது? அதை

அறிவது எவ்விதம் என்பதை அலோபதி முறைப்படியே சிறிது ஆராய்வோம். ஆல்ப்யூமின் ஒரு புரதப் பொருள். தாதுக்களைப் புஷ்டி செய்வதில் சிறந்தது. ரக்தத்தின் திரவப் பகுதியாக இருந்து தனக்குச் சமமான தாதுக்களைப் போஷிக்கிறது. ரக்தத்திலிருந்து திரவத்தில் கரையும் மலப்பொருளைச் சிறு நீராக வெளிப்படுத்தும் விருக்கங்கள் சக்தி குன்றியோ வெந்தோ கெட்டுவிட்டால், மலப் பொருளுடன் தாதுப் பொருளான ஆல்ப்யுமினும் கொஞ்சமாகவோ நிறையவோ வெளியாகின்றது.

இதை அறிய கீழ்கண்ட சோதனை முறைகள் கையாளப் படுகின்றன.

1. ஆல்ப்யுமின் காய்ச்சும் போது நீரிலிருந்து திரண்டு கெட்டியாகின்றது. சோதனைக் குழாயிலிட்டு ஸ்பிரிட் விளக்கில் மேற்புறத்தில் காய்ச்ச வெண்ணெய் போன்று திரண்டுவரும் ஆல்ப்யுமினைக் காணலாம். பாஸ்பேட் உப்பிருந்தாலும் இவ்விதம் திரண்டுவரும். ஆனால் அதன்மேல் அஸிடிக் ஆஸிட் சிறிது தெளித்தால் திரண்டது மீண்டும் கரைந்துவிடும். ஆல்ப்யுமின் கரையாது.

2. நைட்ரிக் ஆஸிட்டை ஒரு அங்குல அளவு சோதனைக் குழாயிலிட்டு மேல் சொட்டுச் சொட்டாக சிறுநீரைவிட இரண்டும் சேருமிடத்தில் ஆல்ப்யுமின் திரண்டு காணும்.

3. பிக்ரிக் ஆஸிட் 1 பங்கு, ஸிட்ரிக் ஆஸிட் 2 பங்கு ஜலம் 100 பங்கு இந்த திரவத்தை சோதனைக் குழாயிலுள்ள சிறு நீரின் மேல் சிறிய பிப்பெட் குழாயின் மூலம் விட ஆல்ப்யுமின் புலப்படும். அதைக் காய்ச்ச ஆல்ப்யுமினைத் தவிர மற்றவை கரையும். ஆல்ப்யுமின் கெட்டிப்படும்.

இப்பரீக்ஷைகளில் ஒன்றால் ஆல்ப்யுமின் இருப்பதை அறிய முடியும். இவ்விதம் இது இருந்தால் விருக்கங்கள் கெட்டுள்ளன என்பது முடிவு. இந்த நோய் பல வகைப்படும்.

1. தனிப்பட்டு ஆல்ப்யுமின் மாத்திரம் வெளியாவது.

2. அத்துடன், சீழ், ரத்தம்; வீணான தாதுகோசங்கள் இவைகளுடன் சேர்ந்து வெளியாவது. இது விருக்கங்களிலோ கவீநிகளிலோ புண்ணிருப்பதைப் புலப்படுத்துகின்றது. இந்

நிலையில் ரக்தமேஹம், பூயமேஹம் (நிஜம்) லாலாமேஹம், ஸிகதாமேஹம் போன்ற மூத்திர நோய்கள் இருக்கும்.

3. மூத்திரத்தின் அளவு குறைந்திருக்கும். உடல் முழுவதும் ஏற்படும் வீக்கத்தில் இந்நிலை ஏற்படுகின்றது. நுரை மிகுந்து கனம் (ஸ்பெஸிபிக் கிராவிடி) மிகுந்து காணும். சீக்கிரம் கெடுதல் விளைவிக்கக்கூடியது.

4. மூத்திரத்தின் அளவு அதிகமாக இருக்கும். வீக்கம் இருக்காது. ஹிருதய ரோகம், பாண்டு முதலியவை இருந்தால் கால் வீக்கம் ஏற்படும். இயற்கையளவை விட கனம் குறைந்திருக்கும். நாட்பட்டுத் தொடரும். சில ஜ்வரங்களில் ஆமம் இருந்தால், அக்னிமந்தம், வெட்டை, விஷ நோய்கள் இவைகளில் இந்நிலை ஏற்படும். கர்ப்பிணிகளுக்கு, சிலருக்கு முதல் கர்ப்ப காலத்தில் இது ஏற்படலாம். அதனால் அபதந்திரகம் முதலிய வாத நோய்கள் ஏற்படலாம்.

இந்த நோய் நிலைகளில் விருக்கம் முதலிய எல்லா பாகங்களிலும் ஏதாவது ஒரு கெடுதி ஏற்படும். இது தவிர சிறுநீரில் வியாதிக்குக் காரணமாகாமல் ஆல்ப்யுமின் ஏற்படுவது உண்டு. சிசுக்களுக்குப் பிறந்த ஒருவாரம் வரை இந்நிலை இருக்கும். தேகப்பயிற்சி செய்ததும் சிலருக்கு நீரில் ஆல்ப்யுமின் இருப்பதுண்டு. இதெல்லாம் நோய்க்கு காரணம் ஆகா.

ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டுள்ள மூத்திர நோய்களில் எத்துடன் இதை ஒப்பிட முடியும்? என்பதை யோசிப்போம். லாலாமேஹம், வஸாமேஹம், மஜ்ஜமேஹம் என்பவை ஆல்ப்யுமின்யூரியா என மாதவநிதானத்தின் முன்னுரைப் பகுதியில் யாதவஜீ கூறுகிறார். ஹகீம் தலஜீத் ஸிம்ஹர், தனது யூனானி சிகித்ஸா ஸாரத்தில் பௌல் ஜுலாலீ என்ற யூனானிப் பெயரிலும், லாலாமேஹம் ஓஜோமேஹம் என்ற ஆயுர்வேதப் பெயரிலும் குறிப்பிடுகிறார். ஸ்ரீ கணநாதஸேனர் லஸீகாமேஹம் என ஸித்தாந்த நிதானத்தில் குறிப்பிடுகிறார். ஸ்ரீரணஜித்ராய் தனது ஸசித்ர ஆயுர்வேதத்தில் ஸாந்திரமேஹம் என்கிறார். ஆக ஆல்ப்யுமின்யூரியா என்பது லாலாமேஹம் வஸாமேஹம் மஜ்ஜமேஹம் ஓஜோமேஹம் லஸீகாமேஹம் ஸாந்திரமேஹம் என்றெல்லாம் ஆறு கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. இவைகளில் எது பொருந்தும் என்பதை ஆராயவேண்டும்.

உமிழ்நீரை லாலா என்பர். உமிழ்நீர் நீர் தாரைவழியே வெளியாவதற்கில்லாததால், உமிழ்நீரில் பிசுபிசுப்பு மிகுந்து

காணப்படாததால், ஆண்களுடைய பௌருஷ க்ரந்தியிலிருந்து வெளியாகும் ஸ்ராவம் கலந்ததே லாலாமேஹம் எனலாம். இந்த பௌருஷ க்ரந்தி ஸ்திரீகளுக்குக் கிடையாதென்பதும் கவனிக்கத்தக்கது. மற்றும் இந்நோயில் விருக்கங்களிலோ கவீநிகளிலோ நோய் கிடையாது.

வஸாமேஹம் என்பது வஸை கலந்தோ வஸைபோன்றோ சிறுநீர் வெளியாவதைக் குறிக்கும். வஸை மாம்ஸத்திலுள்ள நெய்ப்புப் பொருள். ஸுச்ருதத்தில் இதையே ஸர்பிர்மேஹம் என்கிறார். வஸை முதலியவை சூடுபட்டால் உருகும். கெட்டியாகாது. ஆல்ப்யுமின் சூடாக்கும்போது கெட்டியாகிறது. இது ஸ்நேஹங்களுக்கு நேர் எதிரிடையான தன்மை. மஜ்ஜையும் ஒரு நெய்ப்புப் பொருளே. ஆக இவ்விரண்டும் ஆல்ப்யுமின் ஆகமுடியாது.

ஓஜஸ் தான் இனிப்பாக வெளியாகி மதுமேஹமாகிறது. மதுமேஹமும் ஓஜோமேஹமும் ஒருதரப்பட்டதே அதனால் ஓஜோமேஹம் என்ற பெயரும் பொருந்தாது.

ஸாந்திரமேஹம் என்பது நீர் குழம்பாக வெளியாவது. ஆகையால் ஆல்ப்யுமின்யூரியாவாக இருக்குமோ என்ற சந்தேகம் எழ இடமுண்டு ஆல்ப்யூமின் நீர் காய்ச்சினால் தான் கெட்டியாகும். ஸாந்திரமேஹம் அப்படியே வைத்திருந்தாலே குளிர்ந்த நிலையிலேயே கெட்டியாகும். அதனால் இதையும் ஆல்ப்யுமின்யூரியாவாகக் கருத முடியாது. ஆல்ப்யுமின் நீரை வெகுநேரம் வைத்திருந்தாலும் கெட்டியாகாது. அப்படி கெட்டியானால் அதில் ஸாந்திரமேஹக் கலப்பு உண்டு என்றே கொள்ளலாம்.

லஸீகாமேஹம் ஆல்ப்யுமின் நீராக இருக்கலாமா என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம்.

ஆல்ப்யுமின் என்பது புரத வகையைச் சேர்ந்தது. ஒவ்வொரு பிராணியின் தாதுவிலும் இது உண்டு. திரவமானது. ஜலத்தில் கரையும். காய்ச்ச கெட்டியாகும். முட்டையிலுள்ள வெள்ளைப் பகுதியில் பெரும்பகுதி, ரக்தம், ஊன்நீர், மற்றதாதுக் கசிவுகள் இவைகளில் ஸிரம் ஆல்ப்யுமின் உருவில் உள்ள பெரும் பகுதி, கோதுமையிலுள்ள Leucosin போன்ற புரத சத்து இவை எல்லாம் ஆல்ப்யுமினே.

ஆஹாரப் பொருளை கார்போஹைட்ரேட் புரோடீன் கொழுப்பு என்றவாறு நவீனவிக்ஞானிகள் பிரித்துள்ளனர். பாலைக் காய்ச்சி அதில் தயிரை உரைகுத்த கெட்டியாகப் பிரியும் பாகத்தை ஆமிக்ஷை என்றும், திரவப் பகுதியை வாஜினம் என்றும் ச்ரௌதகாரர்கள் சொல்வர். இந்த ஆமிக்ஷை என்ற சொல் புரதப் பொருளுக்கு ஏற்ற சொல் என்பது என் கருத்து.

ரக்தத்திலுள்ள உருவுள்ள வெள்ளை — ரக்த அணுக்கள் சக்ரிகைகள் முதலியவைகளைப் பிரித்து வடிகட்டிய திரவப் பகுதியை ரக்தரஸம், லஸீகா என்று குறிப்பிடுவர். அதனால் ரக்தத்திலுள்ள ஸிரம் ஆல்ப்யுமினும் லஸீகையும் ஒன்றே. அதனால் கணநாதஸேநர் சொன்ன லஸீகாமேஹமே ஆல்ப்யுமின் யூரியாவாகலாம் என நிரூபிக்கமுடியக்கூடியதே. ஆல்ப்யுமின் யூரியாவில் உள்ள அல்ப மூத்ர—பஹு மூத்ரப் பிரிவு லஸீகா மேஹத்திலுமுண்டு என்பதை சரகர் ஹஸ்திமேஹத்தின் லக்ஷணத்தைக் கூறும்போது சொல்கிறார். வாயு கெடும்போது மூத்திரத்தை அதிக அளவில் வெளிப்படுத்தக் கூடும். தடையும் செய்யக்கூடும். ஆக லஸீகாமேஹமே ஆல்ப்யுமின்யூரியா எனக் கருத இடமிருக்கிறது.

இதன் சிகித்ஸை முறையையும் யோசிப்போம். லஸீகா மேஹம் (ஆல்ப்யுமின்யூரியாவை இனி இப்பெயர் கொண்டே அழைப்போம்.) ஸ்வதந்திரம் பரதந்திரம் என இரு வகை. அல்ப மூத்திரமானது அனேகமாக கபர் மிகுந்த சோத (வீக்க) நோயிலேயே ஏற்படும். வீக்கம் கடுமையாகி ஜ்வரம் முதலிய உபத்ரவங்கள் மிகுந்தால் அங்கு வீக்கத்திற்கே முக்கியத்துவம். லஸீகாமேஹம் உபத்ரவமாகும். சோத சிகித்ஸையே பிரதானம். வீக்கம் தொடர்ந்து கண்டால், லஸீகா நீரில் வெளியாகாதவாறு, விருக்கங்களைத் தன் நிலைக்குக் கொணர்வதற்கான லஸீகாமேஹ சிகித்ஸையும் செய்யவேண்டும். வீக்கமின்றியே அல்ப மூத்ரமான லஸீகாமேஹம் கபப்ரதானமான ஹிருதய நோயிலும் பாண்டுவிலும் ஏற்படும். அங்கு பாண்டு—ஹிருதய ரோக சிகித்ஸையே பிரதானம். வீக்கமின்றி அதிமூத்திர லஸீகாமேஹம் ஏற்படும்போது வாதகபப்ரமேஹ சிகித்ஸை நல்லது.

பிரமேஹங்களைப் பிரித்துக் கூறும் போது 20 நோய் நிலைகளைக் குறிப்பிட்டாலும் சிகித்ஸையில் வாதபித்தகப விகாரங்களை ஒட்டி மூன்றாகப் பிரித்துள்ளது கவனிக்கத்தக்கது.

ஸ்வதந்திரமான லஸீகாமேஹம் வாதகபப் பிரதானமாகும். ரத்தத்தின் திரவப்பகுதி லஸீகை. இது கப அம்சம். ரக்தத்திலுள்ள ரக்தகணங்களும் அயமும் பித்த அம்சம். கப அம்சமான லஸீகை வாயுவால் வெளியாக்கப்படுகிறதென வாதகபப் பிரதான சிகித்ஸையாக கசிவு கொழுப்பு இவைகளைக் குறைக்கும் சிகித்ஸை செய்யப்படுகின்றது.

**அநுபவத்திலுள்ள மருந்துகள் :—** *1.* ச்வேதபர்படீ, மூக்கரட்டை கஷாயத்துடனோ, புனர்னவாஷ்டக கஷாயத்துடனோ ஸித்தயோக ஸங்கிரஹத்தின் மூத்ரலகஷாயத்துடனோ கொடுக்கலாம். இது அல்ப மூத்ரலஸீகாமேஹத்தில் நல்லது. *2.* ச்வேதபர்படியை மஞ்சள் கருங்காலி வைரம் பில்வஇலை இவைகளின் கஷாயத்துடனும், ஆரோக்யவர்த்தன ரஸத்தை ச்வேதபர்படியுடன் சேர்த்தோ தனித்தோ கொடுப்பது. *3.* மதூகாஸவம், கதிராரிஷ்டம் இவைகளில் கோமூத்ர சிலாஜதுவைக் கலக்கிக் கொடுப்பது, சந்திரபிரபா குக்குலு, காலமேகநவாயஸம், புனர்னவாமண்டூரம், ஸுராக்ஷாரகாஸீஸம் — இவை எல்லாம் நல்லதே.

உடலைப் பிடித்துவிடுவது, தேப்பது, நல்லமுறையில் யோகாஸனப்பயிற்சி இவை நல்லவை.

உப்பை முழுவதும் நிறுத்திவிடவேண்டும். புளிப்பிலும் நெல்லிக்காயைத் தவிர மற்றவையை நீக்கவேண்டும். உப்பு காத்தை அதிகமாக்கும். வீக்கத்தை அதிகமாக்கும். கசிவைப் பெருக்கும். புளிப்பும் உடலைத் தளரவிடும். வீக்கத்தை உண்டாக்கும். உப்புகளில் இந்துப்பில் கசிவு குறைவு. அதனால் இதை சிலர் சேர்ப்பர். வீக்கமுள்ள நிலையில் உப்பை முழுவதும் தள்ளுவது அவசியம். வீக்கமில்லாத நிலையிலும் உப்பை நீக்குவது நல்லது.

அனேகமாக இந்நோய் கிருச்ச்ரஸாத்யமோ யாப்யமோ ஆகும்.

# இந்தியாவின் மருந்து உற்பத்திக் கலை

[Y. கொண்டல் ராவ், L. I. M.]

[இந்தக் கட்டுரை ஸ்ரீ ராவ் அவர்கள் புதுடில்லியில் நடந்த 13-வது அகில இந்திய மருந்து உற்பத்தியாளர் மகா நாட்டில் The art of Pharmacy in Ancient india- A study on how it could be brought to Modern conditions என்ற தலைப்பில் பேசியதன் தமிழாக்கம். ஸ்ரீ ராவ் அவர்கள் இன்று தென்னிந்தியாவிலேயே மாபெரும் மருந்து உற்பத்தி சாலையைத் திறம்பட நிர்வஹித்துவருபவர். ஜர்மனி முதலிய மிகவும் முற்பட்ட நாடுகளில் இக்கலையில் உள்ள வளர்ச்சியை நேரே கண்டு வந்தவர். சாஸ்திரீயத் தன்மை வழுவாது நவீன யந்திரங்களின் உதவி கொண்டு மருந்துகளின் தரத்தையும் அமைப்பையும் சீராக்க உழைப்பவர். அதனால் இவரின் சீரிய கருத்துகள் மருந்து உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்குப் பெரிதும் உதவும் என்றே இங்கு ஸந்தோஷத்துடன் வெளியிடுகிறோம். —ஆசிரியர் ]

எல்லா வைத்யர்களும் நோயாளிகள் நோயிலிருந்து விடுபட்டு ஆரோக்ய வாழ்வு வாழச் செய்வதையே முக்கிய நோக்காகக் கொண்டவர். ஒவ்வொருவனும் தனக்கு இறுதி கிட்டும் காலம் வரை ஆரோக்ய நல்வாழ்வு வாழ உரிமை உண்டு. அவ்வுரிமையை—ஆரோக்ய முறைகளை ஏற்றுப் பயன்படுத்திக் கொள்வது அவனவனது தனிப் பொறுப்பு. இந்த ஆரோக்யப் பாதுகாப்பில் வைத்யனுள்பட நோயாளி, உதவியாளர்கள், மருந்து உற்பத்தியாளர்கள் என்ற மருத்துவத்தின் நான்கு ஆதாரக்கால்களும் தன் தனது உபயோகமுள்ள பகுதியை செவ்வனே பரிமளிக்கச் செய்ய முற்படவேண்டியிருக்கிறது.

நான் இப்போது பேசவிருப்பது மருந்து உற்பத்தியாளர் என்ற நான்காவது பாதத்தைப் பற்றி. மருந்து தயாரிப்பு, பாதுகாப்பு, விநியோகம் என்ற மருந்துத் தயாரிப்புக் கலை பிராசீன இந்தியாவில் அடைந்துள்ள வளர்ச்சி, அதைத் தற்போதைய நிலைக்கேற்ப அமைத்துக்கொள்வது என்ற இரு விஷயங்களே பேசவேண்டியவை.

மருந்து உற்பத்தியை ஔஷதம்—பேஷஜம் என்று முன்னோர் கூறுவர். முன்னோர்களின் லக்ஷ்யம்—மருந்துகள் பஹு-

கல்பம் (பல்வேறு அமைப்புகளில் உள்ளது) பஹுகுணம் (பல்வேறு உபயோகங்கள் உள்ளது) ஸம்பந்நம் (எல்லா வகையிலும் நிறைவு கொண்டது) யோக்யம் (உபயோகத்திற்குத் தகுந்தது) என்ற குணங்கள் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதே. ஸ்வரஸம், க்வாதம், பானகம், புடபாகரஸம், சூர்ணம், க்ஷாரம், குடிகை, பிண்டம், லேகியம், கிருதம், தைலம், லேபம், வர்த்தி, ஆஸவாரிஷ்டங்கள், பஸ்மங்கள் மற்றும் அனேக கல்பங்கள் என்ற பலவகைகளிலே தேவைக்கேற்றவாறு ஸுகமாக உபயோகிக்கத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

இம்மருந்து தயாரிப்பிற்காக எடுக்கப்படும் சரக்குகள் விஷயத்தில் முன்னோர்களின் கருத்து கவனிக்கத்தக்கது. பச்சையான ஓஷதிகளைக் கொணரத்தகுந்த காலம் இடம் எடுக்கும் வகை இவைகளைப்பற்றி அவர்கள் சிரத்தையுடன் வகுத்துள்ள வழி குறிப்பிடத்தக்கது. ஒரு வருஷம் முழுவதும் சேமித்துவைக்க, அவைகளின் குணம் குன்றாதிருக்க ஓஷதிகளை சரத்ருதுவில் எடுக்கவேண்டும். வேர்களைப் பிடுங்க மரக் கோடாரியைத்தான் உபயோகிக்கவேண்டும். ஓஷதிகளிலுள்ள தேவதைகளையும் ஓஷதிகளையும் வணங்கி வேண்டிக்கொண்டு, வருந்தும் நோயாளிகளின் நன்மைக்காக இதைச் செய்வதாகக் கோரிய பின்னரே அவைகளைப் பிடுங்கவேண்டும். செடி கொடிகளின் உணர்ச்சியைப் பெரிதும் மதித்தே இவ்விதம் கோருவது. ஸர். ஜே. ஸி. போஸ் அவர்கள் பின்னர் கண்டு பிடித்த விக்ஞான உண்மையை அவர்கள் செயலளவில் புகுத்தியிருந்தனர். மருந்துச் செடிகளின் வேரை எடுக்கும் போது வடக்கு நோக்கிச் செல்லும் வேரை மாத்திரம் எடுத்துக் கொள்ளவேண்டும். இதன் காரணத்தை இன்று நாம் ஆராயவேண்டும்.

மற்றும் மருந்து தயாரிக்க உதவும் பாத்திரம், எரிக்க எரி பொருள், எரிக்குமளவு, தயாரான மருந்தைக் காப்பாற்றும் வகை, மருந்துகளின் ஆயுள் அல்லது அவைகள் குணம் குன்றாமலிருக்கும் காலவரை, தயாரான மருந்துகளில் வைத்யனுக்கும் தர்மத்திற்கும் சில பகுதிகளை ஒதுக்கி வைத்த பின்னரே மிகுதியை நோயாளி உபயோகித்தல்—முதலியவைகளை வைத்யனே மருந்து உற்பத்தியாளனுகவுமிருந்து மிகவும் பொறுப்புடன் கவனித்துவந்துள்ளான்.

தற்போதைய நிலையையும் நாம் கவனிக்கவேண்டும். உலகின் தோற்றமே மாறிவிட்டதெனலாம். புதிய பெரிய

நகரங்கள் பழைய ஓஷதி வநங்களிலும் காட்டிலும் பொட்டல்களிலும் தோன்றுகின்றன. காடு — கரைகள் அழிந்து வருகின்றன. பிரயாணத்தில் கையாளும் புதிய வேகமுள்ள வாஹனங்கள் ஆரோக்யத்தில் புதிய பல்வேறு பிரச்னைகளை எழுப்பியுள்ளன. தற்போதைய வைத்யன் தானே மருந்துகளைத் தயாரித்துக்கொள்ள முடியாத சூழ்நிலை. மருந்தைத் தயாரிப்பவருக்கு அதை நோயாளியிடம் உபயோகிக்க முடியாத சூழ்நிலை. மருந்துகளைத் தயாரித்து சேமித்து வைத்துத் தேவையின் போது விநியோகிப்பது என்ற வகையில் பஹுகல்பம், பஹுகுணம், ஸம்பந்நம், யோக்யம் என்ற நான்கு குணங்களுடன் அது இருக்கிறதா என்று ஆராய்வது இன்று மருந்து உற்பத்தியாளரின் பொறுப்பில் உள்ளது.

மருந்துகள் தயாரிப்பில் உதவக்கூடிய மருந்துச் சரக்குகள் சரக ஸுச்ருதர்களின் நாளில் சுமார் 350 ஆக இருந்து பிறகு கிரமமாக வளர்ந்து 650 வரை சென்று பின்னர் வளர்ச்சி நின்றதும் அப்படியே வளர்ச்சி தடைபட்டுவிட்டது. பதார்த்த குணங்களான ரஸவீர்யவிபாகப் பிரபாவங்களை விரிவாக ஆராயும் வகை நிர்ணயிக்கப்படாததால், புதிய சரக்குகளை ஆராய்ந்து தொகுப்பது ஸாத்யமாகவில்லை. நூல்களில் ஏற்கனவே குணவிமர்சம் செய்யப்பட்ட பொருள்களில்கூட நாங்கள் எங்களது உற்பத்திசாலையில் உபயோகிக்கும் மருந்துப் பொருள்களில் சுமார் 80 பொருள்களை இது இன்னதென்று நிர்ணயிக்க முடியாமலுள்ளது. மேலும் நிர்ணயமானவைகூட முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளபடி தகுந்த காலத்தில் தகுந்த பாகத்தை மாத்திரம் தகுந்த முறையில் எடுக்கப்பட்டுள்ளவையா? அவை சாஸ்திரீயமான குணம் நிரம்பியவையா? என்பதும் அறியப்படுவதில்லை. மற்றும், தன்தன் தேவைக்கேற்ப தானே மருந்து தயாரிப்பது நின்று இன்று பெரும் அளவில் வியாபார தோரணையில் தயாரிக்கும் ஔஷத உற்பத்திசாலைகளையே பெரிதும் நம்பியிருக்கிறோம்.

இன்று இந்தியாவில் எல்லா ராஜ்யங்களிலும் ஆயுர்வேத மருந்து உற்பத்திசாலைகள் உள்ளன. இவை சிறியதும் பெரியதுமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேல் உள்ளன. இந்த வியாபாரத்தில் சுமார் 100 கோடி ரூபாய் வரை முதல் முடங்கியிருக்கும் என ஊஹிக்க இடமிருக்கிறது. கிரமமாக வியாபாரத் துறையிலும், தொழில் முறையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தியாவில் ஒரு முக்கியமான வர்த்தகம் என்ற ரீதியில் சில முக்யப் பிரச்னைகள் எழுகின்றன. அவை பின்வருமாறு:

1. இந்தத் தொழிலுக்குத் தனிப்பட்டு இருக்கும் பிரச்னைகள்.

2. சர்க்காரின் நிர்வாஹத்தால் ஏற்படும் பிரச்னைகள்.

3. சரக்கு வியாபாரிகள் மருந்துச் சரக்குகளைச் சேகரிப்பதில் தர நிர்ணயம்.

4. தயாரிப்பின் புதிய விஞ்ஞான ஸாதனங்களைப் பயன்படுத்திக்கொள்ளுதல்—இந்த நான்கு பிரச்னைகளையும் தனியே ஆராய்ந்து எனக்குத் தோன்றும் சில பரிஹாரங்களையும் கூற விரும்புகின்றேன்.

1. வைத்யன் தானே மருந்துகளைத் தயாரிக்கும் போது அதற்கான பயிற்சியும் அவன் பெற்று வந்த நிலை மாறி, மருந்துகளுக்கு அலோபதி வைத்யனைப் போல மருந்து உற்பத்தி சாலைகளை எதிர்பார்க்கிறான். அலோபதி மருந்து உற்பத்தித் துறையில் பௌதிகம் ரஸாயனம் போன்ற அடிப்படை விஞ்ஞான சாஸ்திரங்களுடன் மருந்து உற்பத்தி முறையும் ஆங்காங்கு கலாசாலைகளில் முறையாக கற்பிக்கப்படுகின்றன. இந்திய வைத்யத் துறையிலோ, ஆயுர்வேதம் முதலிய நாட்டு முறைகளுக்குத் தனிப்பட்டதாக இருந்த நியாயம் வைசேஷிகம் முதலிய அடிப்படை விஞ்ஞானங்கள் வளர்ச்சியற்றுக் குன்றி விட்டன. இந்நிலையில் இன்றுள்ள மருந்து தயாரிப்பிலும் பயிற்சி பெற்றுள்ள வைத்யர்கள் மறைந்துவிட்டால் பின்னர் இத்தொழிலை வளர்க்கத் திறமுள்ள மருந்து உற்பத்தித் தொழிலாளி கிடைக்கமாட்டான். அதனால் மருந்து உற்பத்திக் கலையைத் தனித்த பாடமாக்கி ஆங்காங்கு கலாசாலைகளை ஏற்படுத்தி இத்துறையினரின் எண்ணிக்கையைப் பெருக்குவது வளர்ந்துவரும் ஔஷத உற்பத்தித் தொழிலைப் பாதுகாக்க மிகவும் அவசியமான உடனடியான பணி. இதை மத்ய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் செய்ய வேண்டும்.

2. சர்க்காரின் நிர்வாஹத்தால் ஏற்படும் பிரச்னைகள். சில முக்யமான மருந்து சரக்குகள் நமக்கு வெளிநாட்டிலிருந்தே

இறக்குமதியாகின்றன. இவை சுமார் 100 இருக்கலாம். இறக்குமதிக் கட்டுப்பாட்டால் தற்போது அவை கிடைப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. அதனால் விலை ஏற்றமும் கடுமை. அதனால் இந்த சரக்குகளின் இறக்குமதியில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும், சரக்குகளை இந்தியாவிலேயே விளையச் செய்யவும் ஏற்பாடு செய்யும்பொறுப்பை சர்க்கார் உணரச் செய்யவேண்டும்.

ஆஸவாரிஷ்டங்களுக்குத் தீர்வை விதித்து ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கும் ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கும் அவை செல்வதில் நிர்பந்தங்களைப் புகுத்தியுள்ளது வியாபாரத்தைக் கணிசமாகக் குறைத்துள்ளது. இவைகளை மதுவினமாக உபயோகிக்க முடியாது. அதனால் மதுவிலக்கு அமுலுக்கு இவை கெடுதி விளைவிக்காது என்று சர்க்கார் அறியச்செய்து இந் நிர்பந்தங்களைத் தளர்த்த வேண்டும்.

மத்ய சர்க்கார் நாட்டுமுறை மருந்து உற்பத்தித் துறையைக் கட்டுபாடுகளுக்குட்படுத்த டிரக்ஸ் ஆக்ட் முதலான சட்டங்களை இவைகளின் விஷயத்திலும் அமுலுக்குக் கொணர யோசித்து வருகின்றனர். தற்போதுள்ள நிலையில் மருந்துச் சரக்குகளின் குண நிர்ணயத்திற்குச் சித்தமான ஒரு வழி நிர்ணயிக்கப்படாதவரையிலும், ஒரே தரப்பட்ட பேஷஜ கல்பம் நிறுவப்படாதவரை, சர்க்கார் மிகவும் ஜாக்ரதையுடன் இதில் பிரவேசிக்கவேண்டும். கவைக்குதவாத நடைமுறையில் சாத்யமாகாத நியமங்களை ஏற்படுத்தி இந்தத் தொழிலை அழித்து விடக் கூடாது.

3. மருந்துச் சரக்கு வியாபாரம். இந்த உற்பத்தி சாலைகளுக்கான தேவையான பல் கோடி ரூபாய் பொறுமானமுள்ள மருந்துச்சரக்குகளைச் சேகரிக்கும் பொறுப்பு அதற்காகத் தனியே பயிற்சி பெறாத சிலர்களிடம் நிற்கிறது. அவர்கள் அவைகளின் குணப் பாதுகாப்பு முதலிய விஷயங்களில் தனித்து தேர்ச்சி பெறாதவர்கள். மற்றும் சில பொருள்கள் உணவுப் பொருள்களில் அடங்கியவை. அவை பொது வியாபாரிகளால் விற்கப்படுகின்றன.

வியாபாரத்தில் பொதுவாக ஏற்படும் தரக்குறைவு இதிலும் புகுந்து போலிச் சரக்குகள் இன்று விற்பனைக்கு வருகின்றன. இந்தக் குறை நீங்க, சரக்குகளின் தர நிர்ணயத்திற்கான ஆராய்ச்சி முறைகளை வகுப்பதுடன், சரக்குகள் உற்பத்தியாகு

மிடம், அவை உற்பத்தியாகத் தகுந்த சூழ்நிலை, அதை வியாபாரம் செய்யும் வகை முதலியவைகளிலும் கவனம் செலுத்தி நல்ல சரக்குகள் கிடைக்க வழி செய்யவேண்டும்.

மருந்துச் சரக்குகள் 4 வகைப்படும். 1. தாவர இனம். 2. பிராணி இனம், 3. கனி இனம். 4. ரஸாயனப் பொருள்.

தாவர இனத்தைச் சேர்ந்த சுமார் 450 பொருள்கள் இன்று இத் துறையில் தேவைப் படுகின்றன. காபி, டீ, ஏலம் போன்று இவைகளையும் சர்க்காரின் காட்டிலாகா, விவசாய இலாகா முதலியவைகள் மூலம் பயிர் செய்து விநியோகித்தல் வேண்டும். புதிய சூழ்நிலையில் நகரங்கள் ஏற்படுவதற்காக காடுகளும் கரைகளும் அழியும் போது இந்தச் செடி கொடி முதலியவை வளரப் போதுமான புறம்போக்கு நிலங்கள் குறைந்து கொண்டே வருகின்றன.

தற்போது இதைச் சேகரித்துத் தரும் பொறுப்பு படிப்பு வாசனையற்ற நாட்டுப்புறத்தானிடம் மலைவாசிகளிடமுள்ளது. இவர்கள் அதிக அளவில் அவைகளைச் சேகரித்து அதிகக் கூலி பெறவே விரும்புகிறார்கள். இவர்களுக்கு அந்தச் சரக்குகளின் வளர்ச்சியிலோ, வளர்ச்சி அடையும் இடத்திலோ, அவைகளின் தன்மையிலோ கவலை கிடையாது. சில சரக்குகள் வேர் கிழங்கு முதலிய பகுதிகளாகின்றன. இவைகளைப் பெற மரங்களையே வெட்டி வீணாக்க வேண்டியிருக்கிறது. வில்வவேர் எடுக்க 30 ஆண்டுகளாவது முதிர்ச்சி பெற்ற வில்வமரத்தை வெட்டி வேர் எடுக்கவேண்டியிருக்கிறது. இவ்விதமே வெட்பாலை முதலியவையும். இன்றுள்ள சரக்கு வியாபாரத் தேவையைப் பூர்த்தி செய்யப் பெருமளவில் சரக்குகளைச் சேகரிப்பதற்காக இம்மரங்களையே வெட்டி அழிக்கின்றனர். பிற்காலத்திய உபயோகத்திற்காக அவைகளைப் பயிர் செய்யும் பொறுப்பை அவர்கள் உணர்வதில்லை.

சமீபத்தில் ஸர்பகந்தாவின் வியாபாரம் பெருகப் பெருக சர்க்காரின் விவசாய—வன இலாகாக்களும் மற்றும் தோட்டத் தொழில் முதலாளிகளும் அதில் லாபத்தை உணர்ந்து ஸர்பகந்தாவைப் பெருவாரியாகப் பயிர் செய்து லாபமடைகின்றனர். இவ்வகையிலேயே பல கோடி ரூபாய்கள் செலாவணி உள்ள மருந்து சரக்குகளை நல்ல முறையில் பயிர் செய்து விநியோகிக்கும் ஆர்வத்தை உண்டாக்கவேண்டும். பெரிய மருந்து உற்பத்தி சாலைகள் தமக்குத் தேவையான சரக்குகளைத் தாமே பயிராக்க வசதிகளை செய்துகொள்வதும் அவசியம்.

பிராணி இனத்தைச் சேர்ந்த சரக்குகளுக்கும் இந் நிலை ஸமானமே. கஸ்தூரி கோரோசனை புனுகு அம்பர் போன்ற வைகளைத் தரும் பிராணிகளைப் பேணிவளர்க்காவிடில் தேவை மிகுந்து இந்தப் பிராணி இனமே அழிந்து இவை கிடைக்காமலே போகலாம்.

4. புதிய விக்ஞான ஸாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல். மருந்து உற்பத்தித் துறையில் வியாபார நெருக்கடியை ஸமாளிக்கவும் அதிகமாக உற்பத்தி செய்யவும் பாகிங், சுத்தம் முதலியவைகளைப் பாதுகாக்கவும் நவீனயந்திரங்களின் உபயோகம் மிகுந்த பலன் தருகின்றது. இவைகளின் உபயோகத்தால் மருந்துகளின் குணம் குறையாமல் உற்பத்தியளவைப் பெருக்க முடிகின்றது. சூர்ணம் செய்வது, கல்வங்களை இயக்குவது, சாறு பிழிவது, வடிகட்டுவது, மாத்திரை உருட்டுவது, அரைப்பது, கலப்பது, சலிப்பது போன்ற பல்வேறு செய்முறைகளில் இவைகளின் உபயோகம் மிகவும் சிரமத்தைக் குறைக்கின்றது. மனிதனின் கைபடாமல் சுத்தியும் பாதுகாக்கப்படுகின்றது. இவைகளையும் உபயோகிப்பது மிகவும் நல்லதே.

---


## க்ஷய நோயில் ஆயுர்வேதத்தின் வெற்றி.

★

பம்பாய் அரசாங்கத்தின் ஆராய்ச்சி ஸ்தாபனத்திலுள்ள டாக்டர். கிருஷ்ணமூர்த்தியின் ஸமீபகால ஆராய்ச்சியால் T. B. என்னும் க்ஷய நோயைக் கண்டிப்பதில் மிகவும் பயனுள்ளதாக 'ருதந்தீ' நிச்சயிக்கப் பட்டது. இதிலிருந்து எல்லா வைத்யர்களும் ருதந்தீயை உபயோகித்து வருவதில் பலன் அதிகரித்து வருகிறது.

**ருதந்தீ காம்பௌண்ட்**

ருதந்தீ, அப்ரகம், ச்ருங்கம், வம்சலோசனம் முதலிய க்ஷய நோயைப் போக்கவல்ல மருந்துகள் சேர்ந்தது.

**50 மாத்திரைகள் ரூ. 5. 100 மாத்திரைகள் ரூ. 9.**

Sole Agents : **ARYAN AGENCIES,**

44. Maharani Road, Indore City. (M. P.)

தென்னிந்தியாவில் ஏஜண்டுகள் தேவை.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

**ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்**

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS,**

**MUSK MERCHANTS,**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.